


உள்ளுறை


| | |
|---|---|
| கூட்டத்தின் நோக்கங்கள் | உ |
| கூட்டத்தின் வரலாறு | சு |
| செங்குந்தர் சரித்திர நிலைமைக | |
| பத்திரிகை | கச |
| பத்திரிகையின் பயன் | கரு |
| நமது தலைநாடு | கஎ |
| தலைநாட்டின் கடமை | கக |
| நமது முன்னேற்றம் | உஉ |
| …க்தின் கட்டுரை | உக |
| …சார்க் சோலை | நஉ |


…யார்

…சி …லிங… முனிவர்

# ஆசிரியர் சபை

## (Editorial Board)


### தலைவர்:

காஞ்சி. நாகலிங்க முனிவர் அவர்கள்,
மெய்கண்ட சாத்திரப் பிரசாரகர், கீழ்ப்பாக்கம், சென்னை.

மயிலை. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், M. A., L. T.,
Muthialpet High. School, Madras.

மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்,
Clerk, G. P. O., Madras.

தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
Municipal Councillor, Tiruvalur.

தி. அ. சண்முக முதலியார் அவர்கள்,
சைவபுராணிகர், திருவல்லிக்கேணி, சென்னை.

---

### விஷயதானஞ் செய்வோர்;

A. V. முத்தையா முதலியார் அவர்கள், B. A., B. L.,
Secretariat General, Pondicherry.

A. S. முத்தையா முதலியார் அவர்கள், B. A.,
கோட்டாறு, திருவனந்தபுரம்.

P. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள், B.A., B.L.,
கோட்டாறு, திருவனந்தபுரம்.

T. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B.A.,
Pleader, அம்பாசமுத்திரம்.


V. இரத்தின முதலியார் அவர்கள், B. A.,
கூறைநாடு, மாயூரம்.

V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A.,
வீரவநல்லூர், திருநெல்வேலி.

கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், உத்திரமேரூர்.

கா. செங்கல்வராய முதலியார் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், குடியேற்றம்.

முத்துசுவாமி முதலியார் அவர்கள்,



# சந்தா ஆர்டர் பாரம்

Date........................ 192 .

மானேஜர்,

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

சென்னை.

ஐயா,

தயை செய்து என்னை / எங்களை நமது செங்குந்த மித்திரனுக்குச் சந்தா நேயராக / நேயர்களாகச் சேர்த்துக்கொண்டு, இப்பொழுது நடந்து வரும் தொகுதியின் முதல் பகுதியிலிருந்து சஞ்சிகைகளை அனுப்பிக் கொடுக்கவும். சந்தா ரூபாய்.........ம் / க்கும்

மணியார்டர் செய்திருக்கிறேன். / V.P. யில் தபால் செலவு உள்பட அனுப்பவும்.

அன்புள்ள,

1. ........................................ கையெழுத்து

நேயர்களின் கையெழுத்து

2. ........................................

3. ........................................

சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

சென்னை-600 003

THE REGISTRAR OF BOOKS
21 MAR 1927

முருகன் துணை

# செங்குந்த மித்திரன்

மாதப் பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| தொகுதி - க | அட்சய௵ தைமீ | பகுதி - க |
|---|---|---|

வேலுமயிலுந் துணை

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

---

## கூட்டத்தின் நோக்கங்கள்

[ஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் **F. M. T. S.**]

**செங்குந்த மித்திரன்** எனப் பெயரிய இப் பத்திரிகை செங்குந்தக் கூட்டத்தாரது நோக்கங்களையும் கருத்துக்களையும் புலப்படுத்துவதற்கும், அவற்றை அவர்கள் முடிப்பதற்கு ஒருவாறு துணைசெய்வதற்குமாகத் தொடங்கப்பட்டது. இப் பத்திரிகை இதுமுதல் மாதத்துக் கொருமுறை வெளிவரும். இப் பத்திரிகையில் வெளிவரும் விஷயங்கள் யாவை எனின்—

செங்குந்த மக்களது அறிவு ஆற்றல் கொடை புகழ் வழக்கம் ஒழுக்கம் முதலியனவும், அவர்கள் பிரபந்தத் தொகுதியுள் வரும் அரிய நூற்களை விருத்தி செய்வதற்கு ஏற்பனவும், பொதுவாகக் கல்வி தொழில் வாணிகம் விவசாயம் தேசீயம் கல்வெட்டு செப்பேடு முதலிய விஷயங்களில் புதுவனவாயும் ஆராய்ச்சி செய்தும் எழுதப் பெறுவனவுமே யாம்.

இப் பத்திரிகையில், 'நமது கூட்டத்தினுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை' என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ளதை நோக்கின், கூட்டத்தின் வளர்ச்சியின் பொருட்டுப் பிரதி பலன் கருதாது, ஒவ்வொருவரும் முன்வந்து உழைத்தல் எத்துணை இன்றியமையாததென்பது நன்கு விளங்கும்.

இப் பத்திரிகையின் ஒரு பகுதி, இதுகாறும் பரிசோதித்து வெளிப்படுத்தப்படாத மிக்குயர்ந்த தமிழ் நூல்களை நூதன முறையிற் பிரசுரிப்பதற்காக உபயோகிக்கப்படும்.

இவ்வாறு இப் பத்திரிகை பெரும்பான்மை செங்குந்த மரபினர் செய்கைகளைப் புலப்படுத்துவதோடு அவர்கள் தம் கூட்ட வளர்ச்சியின்பொருட்டுச் செய்ய எண்ணி யிருக்கும் நன்முயற்சிகளுக்கு ஒரு சான்றாகவும் இருக்கும்.

இப் பத்திரிகையே யன்றிக் கூட்டத்தார் சில முக்கியமான உயர்ந்த தமிழ் நூல்களையும் அச்சிடத் தொடங்கி யிருக்கின்றார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

இப் பத்திரிகை, செங்குந்த மக்களின் உறுதியான உதவியையும் ஊக்கப் பாட்டையும் பெற்றுத் தம்முடைய அரிய பெரிய நோக்கங்களை முற்றுவித்தற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நீடூழி நிலவுவதாக.

---

## கூட்டத்தின் வரலாறு

இக் கூட்டம் 1912 ஆம் வருஷம் டிசெம்பர் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை தொடங்கப் பெற்று, அது முதற்



கூட்டம் காஞ்சியிலேயுள்ள கச்சபேசுவரர் ஆலய மகாமண்டபத்தில் நடத்தப்பட்டது. அப்போது கூட்டத்தில் சேர்ந்திருந்தவர் பதின்மர். அவருள் ஸ்ரீமான் காஞ்சி ம. த. சாமிநாத முதலியார் (Member, Chingleput, District Board, and President, Hindu Devasthanam Committee.) அவர்கள் கூட்டத்தின் தலைவராகவும், ஸ்ரீமான் கா. வேலு முதலியார் (Superintendent, Postal Audit office, Madras.) அவர்கள் காரிய தரிசியாகவும் இருந்தனர். இக்காலத்திற்குப் பெரிதும் வேண்டற்பாலனவான வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டு நடப்பதே இச் சிறு கூட்டத்தாரின் நோக்கமா யிருந்தது. இப் பெருங்கருத்து முற்றுப் பெறுவது தொடக்கத்தில் முடியாததாகத் தோன்றினமையால், கூட்டத்தாருள் சிலர், செங்குந்த மக்கள் தொகுதியாக வாழும் இடங்கள் தோறும் பாடசாலை பல வைத்து மாணாக்கர்கட்குத் தமிழ் கற்பிக்கும் முறையை முதலில் சீர்திருத்த முயன்றார்கள். இவ்வாறு சில நாள் சென்ற பின் கூட்டத்தாரது முயற்சியின் எல்லையை விருத்தி செய்வது அவசியமாயிற்று. அதனால் 1913 ஆம் வருஷத்து டிசெம்பர் மாதக் கடைசியில் கூட்டத்தின் விதானங்கள் புதுக்கப்பட்டு அவை முன்னையிலும் பரந்த உறுதியான நிலைமையில் வைக்கப் பட்டன; அன்றியும் கூட்டத்தார் செய்ய வேண்டுவனவற்றிற்கு ஒரு புதுப் பத்ததியும் ஏற்பட்டது. அதன்படி கூட்டத்தைப்பற்றிப் பல உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. அவை முதலில் காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் திருஞானசம்பந்தர் கோயிலிலும், பின்பு கச்சபேசுரர் அலங்கார மகா மண்டபத்திலும், அதன் பின்னர்ச் சிதம்பரம் மதுரை கல்லிடைக் குறிச்சி அம்பாசமுத்திரம் தென்காசி கோட்டாறு கன்னியாகுமரி முதலிய இடங்களிலும் நடை பெற்றன.

இப் புதிய முயற்சிகள் யாவும் கூட்டத்தாரை மற்றும் ஓரடி முன்னெடுத்து வைக்கச் செய்தன. அவற்றால், கூட்டம் வலியுற்று அதன் பயனும் நிலை பெறுமென்று எண்ணப்பட்டது. தக்க ஆராய்ச்சியின் பின், கூட்டத்தார் தமது கூட்டத்தை அரசாட்சியாரின் இந்திய சங்கச் சட்டத்தின்படி பதிவு செய்விக்க வேண்டும் எனத் தீர்மானித்து, 1914 ஆம் வருஷம் டிசெம்பர் மாதக்

கடைசியில் காரியதரிசியவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்கள். ஆனால், அவர் துரைத்தனத்தாரால் நாகப்பூருக்கு மாற்றப் பட்டமையால் அவ்வாறு பதிவு செய்விக்கவில்லை.

பின்பு, கூட்டத்தார் விருப்பப்படி அரசாங்கத்தில் ஆகவேண்டிய விஷயத்திலும் பாட்சாலை விஷயத்திலும் ஸ்ரீமான் P. V. துரைசாமி முதலியார் B.A., B.L., (High Court Vakil.) அவர்களும், ஸ்ரீமான் S. P. சிங்காரவேலு முதலியார் B.A., L.T., (Principal, Pachayappas College, Madras.) அவர்களும் மிக முயன்று காரியங்களை நடத்தி வந்தார்கள்.

இக் கூட்டக் காரியத்தில் முயன்று வேலை செய்துவந்த ஸ்ரீமான் ம. த. சபாபதி முதலியார் B.A. அவர்கள் விருப்பத்தின் படி கூட்டத்தின் வளர்ச்சியை மேற்கொண்டு சென்னை மேரி மகாராணியார் கலாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களும், திருவனந்தபுரம் ஸ்ரீமான் தி. பொன்னம்பலம் பிள்ளை M. R. A. S. (Retired Exsie Commissioner, Travancore) அவர்களும், திருவாவடு துறை ஆதீன சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் பொ. முத்தைய பிள்ளை அவர்களும், திருநெல்வேலி ஸ்ரீமான் S. பால்வண்ண முதலியார் அவர்களும், ஸ்ரீமத் விருதை சிவஞான யோகிகள் அவர்களும், அம்பா சமுத்திரம் ஸ்ரீமான் V. P. காந்திமதி நாத பிள்ளை B. A. (Vakil.) அவர்களும், சிதம்பரம் கோயில் காலைச் சந்திக் கட்டளை ஸ்ரீமான் வெ. க. தில்லை நாயக முதலியார் அவர்களும் செய்த உபந்நியாசங்கள் இத்தருணத்தில் மறக்கற்பாலன வல்ல. இவற்றின் பொருட்டு அவர்களுக்குக் கூட்டத்தார் மிகவும் நன்றி செய்தற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

இக் கூட்டத்தில் இதுபொழுது நூற்றுப் பதின்மர் உளர். இக் கூட்டத்தார் இப்போது சென்னை அரண்மனைக்காரன் வீதியில் ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் வியாபாரத் தல மாளிகையிற் கூடித் தங் காரியங்களை நடத்தி வருகின்றனர். சென்ற ஆண்டில் சிறந்த தமிழ்ப் புலவர் சிலர், பலருக்கும் மிகப் பயன் தருவனவாகிய உபந்நியாசங்கள் பல செய்தனர்.



இவ் வருஷத்திலும் அவ்வாறு உபந்நியாசங்களை செய்விப்பதற்கு வேண்டிய முயற்சி செய்யப்படுகின்றது. பொதுவாக உலகத்தாருக்குப் பயன்படும் ஒட்டக் கூத்தர் அவர்கள் செய்த 'தக்கயாகப்பரணி' 'மூவேந்தருலா' 'விக்கிரமச்சோழனுலா' 'நாலாயிரக்கோவை' 'செங்குந்தருலா' 'எழுப்பெழுபது', ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் செய்த 'கந்தபுராணம்', மூதண்ட தேசிகர் அவர்கள் செய்த 'மதுரைப்புராணம்' முதலிய நூல்களை விரைவில் வெளிப் படுத்துவதும் கூட்டத்தார் உத்தேசத்தில் உள்ளது.

இங்கே குறிப்பிட்ட நூல்கள் செவ்வனே செப்பஞ் செய்ய இன்னம் பல பிரதிகள் வேண்டியிருக்கின்றன. இவ்வேட்டுப் பிரதிகளை வைத்திருப்பவர்கள் தயைகூர்ந்து அனுப்பிக் கொடுக்கக் கூட்டத்தார் வேண்டுகின்றனர்.

தாம் மேற்கொண்ட இத் தொழில்களுக்கு இக் கூட்டத்தார் செங்குந்த மக்கள் உதவியை அவாவுவதோடு, இடம் பொருள் ஏவல் உடைய அம்மக்கள் இக் கூட்டத்திற் சேர்ந்து முயன்று உழைத்துத் தங்களை உற்சாகப் படுத்துவதையும் உண்மையாக விரும்புகின்றார்கள்.

இனி, இப் பத்திரிகையின் ஆசிரியத் தானம் நமக்குக் கொடுக்கப் பட்டிருப்பினும், அதன் பொறுப்பை 'வித்தியா நிர்வாக சபை' யாரே (Editorial Board) வகிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இச் சபையில் இப்போது ஐவர் உளர். இவர்கள் வரலாற்று முறையில் நன்கு படித்துப் 'பட்டாபிதானம்' பெற்ற மேன்மக்களாம்.

இச் 'செங்குந்த மித்திரன்' பத்திரிகையின் காரிய நிர்வாக சபையில் இப்போது ஒன்பதின்மர் உளர். அவர்கள் பெயர் முதலியவை இம் முதற் சஞ்சிகையின் முகப்புப் பத்திரத்தில் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

காரிய நிர்வாக சபையார், இப் பத்திரிகை என்றும் முட்டின்றி நடப்பதற்குப் பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாயாக வரையறை செய்து ஆயிரம் பங்குகள் வகுத்திருக்கின்றார்கள். குலாபி

மானிகள் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய அளவு பங்குகள் வைத்துக்கொண்டு இம் முயற்சியை முன்னுக்குக் கொண்டுவந்து என்றும் நிலைபெறச் செய்யவேண்டும்.

---

# செங்குந்தர் சரித்திர நிலைமை

ஸ்ரீ கந்தபுராணம், பிரமாண்டபுராணம், திருவாரூர்லீலை, கருவூர்மான்மியம் முதலான சில நூல்களில் செங்குந்தர், சிவ பரம்பரையினரென்றும், உபசுப்பிரமணியர் சந்ததியினரென்றும், க்ஷத்திரிய சாதியினரென்றும் கூறப்பட்டிருக்கின்றனர். ஆனால், அவர்கள் இப்போது சூத்திரப் பாகுபாட்டின்கண்ணே அடக்கப்பெற்றிருக்கின்றனர். இவர்கள் பண்டைக்காலந்தொட்டே தமிழ்நாட்டில் விளங்கி வந்த தமிழ்ப் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களா? அல்லது, தமிழகத்தில் வந்து குடியேறிய ஆரியமக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா? என்பது நன்கு விளங்கவில்லை.

மிகப் பழையதமிழ்நூல்களைச் சரித்திரமுறையினால் ஆராய்ச்சி செய்து பார்க்கின், அந்நூல்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பாணர், பழையர், பறையர், வள்ளுவர், துடியர், கடம்பர், மறவர், கள்ளர் முதலான குடிகளைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. செங்குந்தரைப்பற்றி ஒன்றுங் கூறப்படவேயில்லை. சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாத பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, மலைபடுகடாம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான மிகப் பழைய தமிழ் இலக்கியங்களிலும், அகத்தியம், தொல்காப்பியம் முதலான இலக்கணங்களிலும் செங்குந்தர் என்பாரைப்பற்றி ஒன்றுங் கூறப்பட்டில்லை.

இக்காலத்தில் பல சாதியார்களது வரலாறுகளைப்பற்றி ஆராய்வதில் அறிவுடையவர்களால் மிகப் பெருமுயற்சி எடுக்கப்படுகின்றது. அத்தகைய முயற்சி செங்குந்த குல விஷயத்திலும் அதிவிரைவில் செய்யப்படுதல்வேண்டும். முதன் முதல் செங்குந்த மக்களது காலம் யாது? அவர்களது பழைய நாடியாது? இவர்கள் உண்மை வரலாறு யாது? என்கிற விஷயங்களை ஆராய்ந்தறிய வேண்டும். இவ்வாராய்ச்சி செய்வதற்குச் செங்குந்த குலத்தாருள்



பொது நோக்கமுடைய விரிந்தநூற் கல்வியும், பற்பல சரித்திர ஞானமும் உடையவர்கள் இல்லாமற் போகவில்லை. அவர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து இப்பெரு முயற்சியில் முயன்று வேலை செய்ய முற்படுதல் வேண்டும்.

இத்தகைய அரிய பெரிய ஆராய்ச்சியில் இறங்குவதற்குப் பற்பல பழைய நூற்சான்றுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைப் பத்திரங்கள், தோற் சாசனங்கள் முதலான சாதனங்கள் பல மிகுதியாகத் தேடல் வேண்டும். இவற்றுள் பெரும்பாலும் பண்டைய தமிழ் நூற்களெல்லாம் எளிதில் கிடைக்கக்கூடும். கல்வெட்டுகள் மட்டும் ஒரு தொகைப்பொருள் கொண்டு முயன்று வேலைசெய்தெடுக்க வேண்டும். நமது அரசாங்கத்தாரால் எடுத்து வைத்திருக்கும் கல்வெட்டுகள் பல எளிதாகக் கிடைக்கக்கூடுவன. செப்பேடுகள் பல செங்குந்த குலத்தவர் மடங்கடோறும் குடியிருக்கும் பண்டாரக் கூட்டத்தவர் வசம் இருக்கின்றன. இவற்றை அவர்களிடம் இருந்து வாங்கிக்கொள்வது சுலபமாகத்தானிருக்கும். ஓலைப் பத்திரங்களும் தோற் சாசனங்களும் வேண்டிய அளவு (Madras Oriental Library) அரசாங்கப் புத்தகசாலையிலிருந்து பிரதி செய்துகொள்ளலாம்.

இப்போது, இராமேசுரம் கோயில் மடாலயம் சம்பந்தமாக செப்பேடு ஒன்று ஸ்ரீமான் T. P. K. ஆறுமுக முதலியார் (Municipal Chairman, Tenkasi, and Trustee of Sankaran Koil) அவர்களிடம் இருப்பதையும், குல சரித்திர சம்பந்தமாக மற்றொரு செப்பேடு ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் (Municipal Councillor, Tiruvalur) அவர்களிடம் இருப்பதையும், சிதம்பரங்கோயில் கட்டளைச் சம்பந்தமாக வேறொரு செப்பேடு ஸ்ரீமான் வெ. க. தில்லைநாயக முதலியார் குடும்பத்தார் அவர்களிடம் இருப்பதையும், நாட்டு சம்பந்தமாக இன்னம் ஒரு செப்பேடு ஸ்ரீமான் உக்கல் கதிர்வேலு முதலியார் அவர்களிடம் இருப்பதையும் செங்குந்த குலமக்கள் வாங்கிப் போற்றவேண்டும். இச்செப்பேடுகள் [illegible]கும் சரித்திர ஆராய்ச்சிக்கு மிக்க துணையாவனவாம்.

முதன் முதல் தென்னாட்டில் செங்குந்த குலமக்கள் சரித்திரம் இக்ஷுவாகுவின் சந்ததியில் வந்த முசுகுந்தன் என்னும் சோழ அரசனோடு காணப்படுகின்றது. முசுகுந்தன் அருந்தவம் பெரும்பகல் செய்து முருகக்கடவுள் பிரசாதமாக நவவீரரைப் பெற்றுச் சோணாட்டை ஆண்டு வந்தான் என்று கந்தபுராணம் சொல்லும். முசுகுந்தச் சோழன் காலத்தைக் குறித்துத் திட்டமாக ஒன்றுந் தெரியவில்லை. முசுமுகன், இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சேரன் செங்குட்டுவன் என்னும் அரசன் தம்பியும் ஜைனசமயத் துறவியும் ஆகிய இளங்கோவடிகள் செய்த 'சிலப்பதிகாரம்' என்னும் காவியத்துள்ளும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் அடிகள் செய்த 'மணிமேகலை' என்னும் காவியத்துள்ளும் காணப்படும் 'கடல்கொண்டமுதூர்' என்னும் காவிரிப்பூம் பட்டினத்தை, மிகப் பழைய காலத்தில் ஆண்டவன் என்பது அறியப்படுகின்றது. இவற்றுள்ளிருந்து முசுமுகச் சோழன் காலம் ஆராய்ந்து அறியப்படுதல்வேண்டும். இவ்வரசனைப்பற்றித் திருவாரூர்ப்புராணம், திருவாரூர்லீலை, திருவாரூர் நான்மணிமாலை, உறந்தைமான்மியம், கருவூர்க்காதை முதலான பிற்காலத்து நூல்களின்கண் சரித்திரங்கள் பல காணப்படுகின்றன. அவை சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுவனவேயாம்.

செங்குந்த குலமக்களுக்கு முதற்பெயரான 'கைக்கோளர்' என்ற சொல் திவாகரம் என்னும் பழைய நூலொன்றில் மட்டும் காணப்படுகிறது. பிங்கலம், காங்கேயம் முதலான நிகண்டுகளில் இப் பெயர் காணப்படவில்லை. தமிழ்க் கந்தபுராணத்துள்ளே இப் பெயர் காணப்படுகிறது. திவாகரம் கி. பி. 7 வது நூற்றாண்டிற்குமுன் செய்யப்பட்டது என ஒரு சாராரும், 11 வது அல்லது 12 வது நூற்றாண்டில் செய்யப்பட்டதென மற்றொரு சாராரும் கூறுகின்றனர்.

பதினொன்றாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த குலோத்துங்கச்சோழன் காலத்தவராகிய ஒட்டக்கூத்தப் புலவர் செய்த ஈட்டி எழுபதுள் செங்குந்த குலமக்கள் பெருமையெல்லாம் நன்கு விளக்கமாகக் காணப்படுகிறது. இவ்வரிய பிரபந்தம் தோன்றிய காலத்திற்கு முற்பட்ட காலங்களில் செங்குந்த



குலமக்களைப்பற்றிய சரித்திரம் ஒன்றும் தமிழ்நூல்களிற் காணப்படவில்லை. பின்னர் கி. பி. 1185 வது நூற்றாண்டில் ஸ்ரீஞானப்பிரகாச முனிவேந்தர் செய்த 'கந்தபுராணம்' என்னும் பாரகாவியத்துள் செங்குந்த குலமக்கள் வரலாறுகள் எல்லாம் நன்கு கோவை செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குப் பின்னர் கி. பி. பதினாறும் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்த ஸ்ரீ கச்சிக்கச்சியப்பர் செய்த கந்தபுராணத்தும் செங்குந்த குலமக்கள் வரலாற்றை முற்றும் விளக்கமாகக் காணலாம். ஆனால், இப்புராணம் அச்சுக்கு வந்தபோது அவரவர்கள் மனம்போனபடி திருத்தியும் விளக்கியும் கூட்டியும் ஆயிரக் கணக்கான செய்யுட்களை விலக்கியும் வெளியிட்டதாக இப்போது கிடைக்கும் ஏட்டுப் பிரதிகளால் நன்கு தெரியவருகிறது.

கி. பி. 10 வது 16 வது நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலங்களில் உண்டான கல்வெட்டுகளில் செங்குந்த குலமக்கள் பெருமையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. இதற்குப் பிற்காலங்களில் பல புலவர்களால் பாடப்பெற்ற செங்குந்தர் பிள்ளைத்தமிழ், அந்தாதி, மாலை, கலம்பகம், உலா, பரணி, தசாங்கம், திருப்புகழ், சதகம், திருக்கைவழக்கத்தந்தாதி, தூது, கோவை, அலங்காரம், வல்லான் காவியம், புராணம் முதலான பலப்பல நூல்களில் செங்குந்த குலமக்கள் அரிய பெரிய வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கலாம். ஒட்டக்கூத்தர் காலத்தவராகிய புகழேந்திப்புலவர் செய்த திருக்கை வழக்கமும் சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரும்பாலும் துணைசெய்யக்கூடும்.

முசுகுந்தச் சோழனைப்பற்றிய ஆராய்ச்சியால் செங்குந்த குலமக்கள் சரித்திர பூர்வநிலை அறியக்கூடும். கந்தபுராணம் சொல்லுகிறபடி வீரவாகு தேவர் முதலான ஒன்பதின்மர் சந்ததியினரே செங்குந்த குலமக்கள் என்று ஏற்படுகிறது. இவ்வொன்பதின்மர் வடநாட்டிலிருந்து தென்னாடு வந்து சேர்ந்தவர் என்பது கந்தபுராணக் கதை. இதனால், செங்குந்த குலமக்கள் வடநாட்டு ஆரிய இனத்தைச் சார்ந்தவர் என்று நினைக்க இடந் தருகிறது. இங்ஙனம் முச்முகச் சோழ அரசனால் தென்னாடு வந்து சேர்ந்த

போது அவர்கள் தமிழ்மக்களாக மாற்றப்பட்டுச் **'சோழமண்டல முதலிகள்'** என்று அழைக்கப்பட்டார்கள் எனத் திருவாரூர்லீலையில் காணப்படுகிறது.

ஒரு சிலர் செங்குந்த குலமக்கள் ஆதொண்டைச் சக்கரவர்த்தியினால் வடக்கினின்றும் தொண்டை மண்டலத்திற்கு கொண்டுவரப்பட்டனர் என்பர். வேறு சிலர் மகதமுதலான வடநாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற் குடிகோலி நெசவு தச்சு முதலான கைத்தொழில்களைச் செய்துகொண்டிருந்த கம்மிய சாதியைச் சேர்ந்தவர் என்று கூறுவர். மற்றுமுள்ள சிலர் நாகர் என்னும் தமிழ்நாட்டுப் பூர்வ சாதியிலிருந்து பிரிந்து மணல் வெளிகளிலும், மலைக்காடுகளிலும், வசித்துக்கொண்டு வில் வித்தையில் சிறப்புற்றிருந்த எயினக்குடியினரே என்றும் சொல்லுவர். இவர்களெல்லாம் தம்முடைய முடிபுகளுக்குத் தக்க ஆதாரங்கள் தாங்கள் எழுதிய தமிழ் நூல்களில் காட்டினார்களில்லை. இவையன்றி ஆங்கிலப்புத்தகம் சிலவற்றிலும் செங்குந்த குலமக்கள் வரலாறு பல முரண்பட எழுதப்பெற்றிருக்கின்றன.

ஒரு சாதியினருடைய உற்பத்தியையும் அதன் விருத்தியையும் போக்கையும் இந்நாளில் அறிவது மிகக் கடினமானகாரியமாகும். அதற்குச் செங்குந்த குலமக்களுள் ஆங்கிலமும் தமிழும் சம்ஸ்கிருதமும் நன்கு கற்றும் பண்டைக்காலச் சரித்திர ஞானமும் உடையவர்கள் ஒருங்கு சேர்ந்து உட்சான்றுகளாகிய பல நூல்கள், புறச்சான்றுகளாகிய கல்வெட்டுகள், தாமிரப்பட்டயங்கள், ஓலைச்சீட்டுகள், ஐதீகங்கள் முதலான பல் வேறு மூல ஆதாரங்களுடன் ஆழ்ந்து ஆராய்ந்து **'செங்குந்த குலசரித்திரம்'** ஒன்று விரிவாகவும் விளக்கமாகவும் எழுதல் வேண்டும். காலபேதத்தினால் பிற ஜாதியரும் ஜாதியில்லாரும் அவ்வப்போது தாறுமாறாக எழுதி வெளியிட்டு வரும் பத்திரிகை முதலானவற்றைச் செங்குந்த குல மக்களுள் ஒரு சிலாவது வாசித்துப் பார்ப்பதில்லை. எழுதத் தொடங்கும் செங்குந்த குல சரித்திர நூலில் பிற ஜாதியர் கட்டி நடத்திய பொய்யுரைகளும், ஜாதியில்லார் கூறும் புனை உரைகளும் அறவே களையப்படுதல்வேண்டும்.



செங்குந்த குலமக்கள் கி. பி. 10 வது, 11 வது நூற்றாண்டுகளில் சோழ அரசர்களாக இருந்த சமரகேசரி என்னும் பராந்தகச் சோழன், இராஜராஜச்சோழன் முதலானவர்களுடைய மந்திரிகளாகவும், போர்வீரர்களாகவும், படைகளின் தலைவர்களாகவும் சிறப்படைந்திருந்தனர். அக் காலங்களிலேயே செங்குந்த குலமக்கள் தம் ஜெயவீரத்தன்மையினால் வடக்கிருந்து இத் தமிழ் நாட்டிற்கு வந்த பல்லவ இராஜாக்களாலும் மிகவும் உயர்வாகப் பாராட்டப்பட்டனர். அக் காலங்களில் 'கைக்கோளப் பெரும்படை' அல்லது 'கைக்கோலப் பெரும்படை' என்ற பெருஞ்சைனியம் ஒன்று இருந்து வந்ததென்பது அக் காலங்களின் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. போர்த்தொழிலில் வல்லவராக இருந்த செங்குந்த குலமக்கள் பிறகு எப்போது ஆடைநெய்யுந் தொழிலைக் கற்றுக்கொண்டனர்? அத்தொழிலை யாரிடமிருந்து கற்றுக்கொண்டனர்? என்ற விஷயங்களை அறிவதற்கு இப்போது முடியவில்லை; ஆராய்ந்தறியவேண்டும்.

நெய்யுந் தொழில் பாவமில்லாத் தொழில் என்பது மட்டும் காணப்படுகின்றது. இத் தொழில் பட்டுச் சாலியர் ஒருவருக்கே சிறப்புவகையில் பொருந்துமென அடியார்க்கு நல்லார் 'பட்டு நூலாலும் எலிமயிராலும் பருத்தி நூலாலும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியர் இருக்குமிடங்களும்' என்று சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை உரையுள் குறித்திருக்கின்றனர்.

செங்குந்த குலமக்கள் சோழ பாண்டிய பல்லவ அரசர்களிருந்த மிகப் பழைய காலங்களில் அவர்கள் ஆதரவைப் பெற்று உயர்ந்த நிலைமையில் அநேகர் பெருந்தமிழ்ப் புலவர்களாகவும், சிவாலய குகாலய ஸ்தாபகர்களாகவும், அவ்வாலயங்களின் தர்மகர்த்தர்களாகவும், சைவமடாதிபதிகளாகவும், சைவசமய பரிபாலகர்களாகவும், கொடையாளிகளாகவும், குறுநில மன்னர்களாகவும் இருந்து பெரும்புகழ் பெற்றனர். இவ் விஷயங்களையெல்லாம் புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர் பாடிய ஈட்டியெழுபது, எழுப்பெழுபது, பரணி என்னும் செஞ்சொற் பிரபந்தங்களினால் செவ்வனே அறியலாகும்.

முற்பட்ட காலங்களில் தமிழ்ப் புலமை, தரும ஆட்சி, வீரத் தன்மை யாதிகளால் சிறப்புற்று உயர்ந்த நிலையில் இருந்த செங்குந்த குலமக்கள் இந்த நாளில் என்ன நிலைமையில் இருக்கின்றார்கள்? அம்மம்ம! அறிவாளிகள் பெரிதும் வருந்தத்தக்கதும், பிற ஜாதிகளிற் பிறந்தவர்கள் வெறுக்கத் தக்கதுமாகிய மிகத் தாழ்ந்த நிலைமையிலன்றோ இருக்கின்றார்கள். இதற்குச் செங்குந்த குலமக்களுள் சீர்திருத்தக்காரர்கள் அவ்வப்போது தோன்றாமையே ஒருகாரணமாகும். சீர்திருத்தக்காரர்கள் தோன்றிச் சிறந்த மனிதர்களுடைய நாகரீக வளர்ச்சிக் கேற்பச் செங்குந்த குலமக்களைச் சீர்ப்படுத்தி யிருப்பரேல், இவ் வீழ்ச்சி நிலைக்கு அவர்கள் வந்திரார். மற்றைய ஜாதிகளில் பிறந்துள்ளவர்கள் அந்தந்தக் கால வகைகளுக் கிணங்க முயற்சிசெய்து எல்லாவகைகளிலும் முன்னுக்குச்சென்று விளங்கிவருவதைக் காண்கின்றோம். இக் காலத்தில் ஆங்கில ஆட்சியின் கீழ் வளம்படாதார் செங்குந்த குலமக்கள் ஒருவர் நீங்கலாக மற்றைய வகுப்பாருள் ஒருவருமிலர் என்று சொல்லலாம். கால கதியால் கீழ் நிலைமை யடைந்துள்ள செங்குந்த குலமக்கள் இக்காலத்தின் நாகரீக விருத்திக்குத் தக்கபடி திருந்திச் சிறப்படைதல் வேண்டும். அப்படிச் செய்யாவிடில் செங்குந்த குலமக்கள் காலக்கிரமத்தில் இன்னம் மிகத் தாழ்ந்த நிலைமையை யடைந்து சாலத் துன்பப்பட வேண்டிவரும். அவர்கள் தம் தற்கால நிலைமையை நினைக்கும்போது கல்விக்குறைவே இதற்கு முக்கிய காரணமென்று சொல்லலாம். இக் குறைவே செங்குந்த குலமக்களிடம் பெரிதாகக் காணப்படுகின்றது. இது கொண்டன்றோ அரசாங்கத்தார் இவ்வகுப்பினரைக் கல்வியில் பின்னடைந்துள்ள வேறு பல வகுப்புகளோடு சேர்த்துவிடலாயினர். கல்வியில்லாக் குறைவு நீக்கப்படுமானால், அப்போது செங்குந்த குலமக்கள்பாலுள்ள அறிவின்மையும், வறுமையும், இவைகளால் உண்டாகுந் தீமைகளும் ஒழிவடையுமென்பது உண்மை.

செங்குந்த குலமக்கள் எதிர்காலத்தில் உயர்ந்த நிலைமையை அடைவதற்கு முக்கிய ஆதாரமாக இருப்பது உயர்தரக் கல்வியாகும். எந்த வகுப்பினர்க்கும் அவர் தம்மேலேற்றத்திற்கு முதலில் இன்றியமையாது வேண்டப்படுவது உயர்தரக்



கல்வியே. அக் கல்விதான் எல்லாவிதங்களிலும் சிறப்படைவதற்கு முக்கிய சாதனமாகும். இவ்வுயர்தரக் கல்வியின் சகாயத்தினால், செங்குந்த குலமக்கள் பெரும்பான்மையோர்க்குச் சீவனோபாயமாகவுள்ள கைத்தொழிலாகிய நெய்தற்றொழிலை இக்காலத்திற்கேற்பப் புதிய முறைகளில் விருத்தி செய்யலாம். இக் கல்வியினாலேயே, செங்குந்த குலமக்கள் செய்து வரும் விவசாயம், வியாபாரம் முதலானவைகள் இக் காலத்திற்கு ஏற்ற வண்ணம் திருந்தி நன்கு நடைபெறும். ஆகவே எல்லாவற்றிற்கும் உயர்தரக்கல்வி வேண்டற்பால தொன்றாம்.

ஆரம்பக் கல்வியே செங்குந்த குலமக்கள் பலரிடம் காணப்படவில்லை என்று சொல்வது மிகையாகாது; ஆனால், அவர்களுக்கு நடுத்தரக்கல்வியும் உயர்தரக்கல்வியும் மிகப்பயன்படும் என்பதில் தடையேயில்லை.

---

## பத்திரிகை

[ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்]

மானிடர், பல வழியிலும் தம் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு அமைந்துள்ள ஆதரவுகள் மிகப் பல. அவற்றுளெல்லாம் தலை சிறந்தவை கல்வியும் கேள்வியும் என இவை. கல்வி என்பது, ஒருவன் நல்லாசிரியரை யடுத்து முறையே நன்னூல்களைக் கற்றலாகும். கேள்வி என்பது, வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேட்பது. இவ்விரண்டனுள்ளும் கேள்வியே எவர்க்கும் நலம் பயப்பதாகும். இதனால்,—

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை"

என்றார் திருவள்ளுவர்.

ஆயினும், அச்சு யந்திரத்தின் உதவி ஏற்பட்ட இக் காலத்தே, கல்வி கேள்வி ஆகிய இவற்றின் நலன்களைப் புத்தகங்களும், சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் வெளிப் போந்து பூர்த்தி செய்கின்றன. கேள்வியாலாகிய நலங்களையெல்லாம் இக் காலத்துப் பத்திரிகைகளே பெரும்பான்மையும் பயப்பன

வாகின்றன. பத்திரிகைகள் பல வகையாகக் கால அளவில் வெளிப்பட்டு அவ்வப்போது நிகழும் விஷயங்களை வெளிப் படுத்துகின்றன. அதனால், இலௌகிக சம்பந்தமாகப் பத்திரிகைகள் செய்யக்கூடிய சிறந்த நன்மைகள் வேறு எவ்விதமான சாதனங்களாலும் ஏற்படவேமாட்டா.

பத்திரிகைகள் அகநாடு புறநாடு முதலிய பற்பல நாட்டின் செய்திகளை அவ்வப்போதே வெளியிடுவன. ஆகையால் அவை செய்யும் நன்மைகள் அவ்வப்போதே பயன்படுவன வாகும் என்பது உண்மை.

நாம் நாகரீகம் பெற்ற பிற நாடுகளோடு உறவாடி நாமும் நம்முடைய நாடும் உணர்ச்சி யடைய வேண்டுமானால், நமது நாட்டில் தினபத்திரிகைகள் பல எழுந்து உலவி வர முயலுதல் வேண்டும். எனவே, பலரும் பத்திரிகைகளைப் பெற்றுப் படித்து நலம்பெற வேண்டு மென்பதாம். இங்கிலாந்து முதலிய நாடுகளில், மணிதோறும் பத்திரிகைகள் வெளிவருகின்றன என்பதைக் கேட்க நம்மவரில் பலர் ஐயுறவும் ஆச்சரியமும் கொள்ளுவர். ஜப்பான் முதலிய தேசங்களில் கைவண்டி யிழுப்பவர்களுங்கூட நாள்தோறும் பத்திரிகைகள் வாங்கிப் படித்து நலம் பெருகின்றனர். சமீப காலத்தில் சீர்திருத்தம் பெற்ற ஜப்பான் தேசத்தில் படிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்குப் பத்துப் பேரானால் தொன்று தொட்டு நாகரீகம் பெற்று விளங்கி வரும் நமது நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு ஏறக்குறைய பத்துப்பேரே ஆகின்றனர். அந்தோ! இக்குறை எக்காலத்தோ நிறைவுறுவது. கல்வியின் நிலை இந்நிலையிலிருந்தால் புத்தகங்களும் பத்திரிகைகளும் எழுந்து உலவுவது எந்தக் காலமோ? இது நிற்க, எழுதப்படிக்கத் தெரிந்த சிலராயினும் பாஷாபிமானமும் தேசாபிமானமுங் கொண்டு பத்திரிகைகளை வாங்கிப் படித்து ஆதரிப்பாராயின், இக் காலத்தே உண்டாயிருக்கும் சீர்திருத்தக் கொள்கைகள் முன்னுக்கு வரவும், அதனை மேற்கொள்ள முயலும் மானிடர் முன்னேற்ற மடையவும் வழி உண்டாகும். இந்த வகையில் பலவித நன்மைகளைச் செய்ய நாடித் தோன்றியுள்ள இச் 'செங்குந்த மித்திரன்' என்னும்



மாதப் பத்திரிகை விரைவில் வாரப் பத்திரிகையாக வெளி வரும்படி எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

# பத்திரிகையின் பயன்

[ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்]

பழைய நாட்களில் பத்திரிகைகள் இல்லாமையால், நம் நாட்டவர்கள் நாகரீகத்திலும் கல்வியிலும் அறிவு வளர்ச்சியிலும் கைத் தொழிலிலும் மிகவும் குறைவுபட்ட நிலைமையில் இருந்தார்கள். ஓர் ஊரில் நடப்பது தொலைவில் உள்ள மற்றோர் ஊரார்க்கு எளிதாகத் தெரியாது. அக்காலத்தில் அச்சுக் கூடங்கள் இல்லாமையால், கற்றவர்கள் தாம் அறிந்த அரிய பெரிய நுண்பொருள்களைப் புத்தகங்களாகவும் பத்திரிகைகளாகவும் பதிப்பிட்டு மற்றவர்களுக்கு அவற்றைத் தெரிவிப்பதற்கு வழியில்லாமலே யிருந்தது. அத்தி பூத்தாற்போல் எங்கோ சிலர் கற்றவர்களாய் இருந்தார்கள். மற்றவர்களெல்லாரும் கல்லாதவர்களே. கற்றவர்கள் தமது கல்வியைப் பயன் படுத்தவும், கல்லாதவர்கள் அதனைப் பயன் படுத்திக்கொண்டு அறிவிற் சிறந்து வாழவும் இடம் இல்லா திருந்தமையால், அக் காலத்தில் வறுமையும் பஞ்சமும் அடிக்கடித் தோன்றி நம் நாட்டவர்களிற் கணக்கிறந்தவர்களை உயிர் மாளச்செய்து வந்தன.

இத்தனைத் துன்பங்களும் நம் நாட்டைவிட்டுப் பையப்பைய அகலும் பொருட்டு வெள்ளைக்காரர் துரைத்தனமும், அவர்கள் வழியே அச்சுக்கூடம் புத்தகங்கள் பத்திரிகைகளும் இறைவனருளால் நமக்குத் தரப்பட்டன. பத்திரிகைகள் பெருகப் பெருக எளிதிலே கல்வி யறிவுபெறக் கூடாதவர்களும் அவைகள் நயத்த விலைக்கு எளிதிற் பெற்றுப் படித்து மிக்க அறிவு கூடப் பெறுகின்றார்கள். தொலைவிலுள்ள பல ஊர்களிலும் பல நகரங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை யெல்லாம் அறிந்துகொள்ளுகிறார்கள். தமக்குள்ள குறைபாடுகளை யெல்லாம் அவற்றின் வாயிலாகத் துரைத்தனத்தார்க்கு எடுத்துக் காட்டி நீக்கிக் கொள்ளுகிறார்கள். ஓர் ஊரில் விளை பொருள்கள் குறைந்து பஞ்சம் நேரிட்டால், அவை ஏராளமாய் விளைந்த மற்ற ஊர்களி

லிருந்து அவற்றை வருவித்து அப் பஞ்சத்தை விலக்கிக் கொள்கிறார்கள். உழவு வாணிகம் கைத்தொழில் முதலானவைகளை அயல் நாட்டிலுள்ளவர்கள் எவ்வெவ்வாறு நடத்தி ஊதியம் பெறுகிறார்கள் என்பதை நன்றாகத் தெரிந்து, அவர்களைப் போலத் தாமும் அவற்றைத் திறமையாக நடத்தி ஊதியம்பெறக் கற்று வருகிறார்கள். இன்னும் பற்பல நாடுகளில் உள்ள ஆண்பாலர் பெண்பாலரின் நடை யுடை ஒழுக்கங்களைத் தாமிருக்கும் இடங்களி லிருந்தபடியே தெரிந்து நாகரீக வாழ்க்கையிலுஞ் சிறந்து வருகிறார்கள். இன்னும் பத்திரிகையினால் நம் நாட்டவர். அடைந்துவரும் நலங்களை எடுத்துரைக்கப் புகுந்தால் ஏடு இடங் கொள்ளாது.

இவ்வளவு சிறந்த பத்திரிகைகளை இங்கிலாந்து அமெரிக்கா முதலான அயல் நாடுகளிலுள்ள குடிமக்கள் நாளுக்கு நாள் பதினாயிர நூறாயிரக் கணக்காகப் பெருகச்செய்து வருவதுபோல, நம் நாட்டவர்கள் செய்யவில்லை. அந்த நாடுகளில் நாடோறும் பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு படியாதவர்களைக் காண்பது அரிது. நம் நாட்டவர்களில் பத்திரிகை வைத்துப் படிப்பவர்களைக் காண்பதோ அரிதா யிருக்கின்றது. அதனாற் பத்திரிகையைப் பெருக்க வேண்டும். அளவிலும், அதனைப் படிக்கவேண்டும் அளவிலும் நம் நாட்டவர் மற்ற நாட்டவர்க்கு மிகவும் பிற்பட்ட நிலைமையில் இருக்கின்றார்கள். இந்தக் குறை விரைவில் விலக்கப்படல் வேண்டும்.

ஒவ்வோர் இனத்தாரும் ஒவ்வொரு கூட்டத்தாரும் தமக்குள் கற்றவர்களா யிருப்பவர்கட்குப் பலவகையாலும் உதவிசெய்து, அவர்களைக் கொண்டு புத்தகங்களும் பத்திரிகைகளும் பல நூறாயிரக்கணக்காய் வெளிப்படுத்தித் தாம் நலம் பெறுவதோடு தம்மைச் சேர்ந்த எல்லாரும் நலம் பெறுமாறு விரைந்து முயலல் வேண்டும்.

செங்குந்த குல மக்களுக்கு நன்மையைச் செய்யத் தோன்றிய இச் "செங்குந்த மித்திரன்" இறைவனருளால் நீடூழி வாழ்க.



# நமது தலைநாடு

[ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்]

நமது குலமக்கள் தொன்று தொட்டுத் தலை நாடென்று மிகப் போற்றி வருவது காஞ்சிமாநகரே. இப் புண்ணிய நகரம் ஆரிய மக்களால் புண்ணியாவசன மந்திரத்தில் எடுத்து ஆளப் பெற்றது. வேத வேதாந்தங்களால் கூறப்பெற்றது. காளிதாச மகா கவியால் 'நகரேஷு காஞ்சி' என்று அழைக்கப்பெற்றது. சைவசமய பரமாசாரியர்களாலும் மற்றைய நாயன்மார்களாலும் தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளுள் போற்றிப் படிக்கப்பெற்றது.

இம் மாட்சிமையுடைய இந்த முத்திநகரத்தை நம்மவர்கள் மட்டும் அன்றி மற்றைய வகுப்பினரும், தங்கள் தங்களுக்கு மகாநாடு (தலைநாடு) என்றே செப்பேடு கல்வெட்டு முதலியவற்றுள் வரைந்து வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

நம்முடைய மரபினர், கீழ்நாடு மேல்நாடு வடநாடு தென்னாடு முதலிய இடங்களில் கூட்டம் கூட்டமாக அங்கங்கே வேண்டிய சௌகரியங்களோடு நிலைபெற்றிருந்தாலும், கடைசியாக விசாரிப்பில் (ஆராய்ச்சியில்) காஞ்சிபுரம் என்கிற நகரந்தான் அவர்கட்குத் தாயகமாக முடியும்; வேறாகக் கூறவே முடியாது. இவ்விஷயம் ஸ்ரீகாமக்கோட்டி பீடமந்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

முற்காலத்திருந்த நம்முடைய தலைவர் ஸ்ரீ வீரவாகு தேவர் அவர்கள் அரசாங்க முறைக்கு வரையறை செய்த நாடுகள் நான்கு. அவற்றை இப்போது திசைநாடுகள் என்று நம்மவர் அழைத்து வருகின்றனர். அந்த நாடுகள் கிழக்கேயுள்ள சிவபுரம், மேற்கேயுள்ள திருவிரிஞ்சிபுரம், தெற்கேயுள்ள தொந்திபுரம், வடக்கேயுள்ள சோளசிங்கபுரம் என்பனவாம்.

திசை நாட்டுக்குப் பற்பல கிளைநாடுகள் உள. கிளை நாடுகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான கிராமங்களை உடைத்தாயிருக்கின்றது. திசைநாடு கிளைநாடு கிராமம் முதலியவற்றிற்கு

ஆண்டவர் ஸ்தானமாகவும் மகாநாடாகவும் கொள்ளக் கிடப்பது காஞ்சிபுரம். கிராமம் கிளை நாட்டுக்கும், கிளைநாடு திசை நாட்டுக்கும், திசைநாடு மகாநாட்டுக்கும் பொருத்தமாக எந்த விஷயத்திலும் நடந்து கொள்ள வேண்டியது. இவை முற்கால தற்கால இனி வருங்கால முறையாம். இதை மறுக்க ஒருவராலும் முடியவே முடியாது.

முற்கண்ட சுதந்தரத்தை முற்றும் மேற்கொண்ட நமது தலை நாடு (ஆண்டவர் ஸ்தானம்) இக்காலக் கிளர்ச்சியை ஒரு சிறிதும் கவனியாமல் உறக்கத்திலிருப்பது பெரிதும் வருந்தற்பாலதே. நம்மவர் நிற்க, மற்றைய ஒவ்வொரு கூட்டத்தவரும் அரசாங்க முதலிய கருமங்களில் மேம்பட்டு முன்னேற முயன்று வருவதை நம் தலைநகர்த் தலைவர்கள் மனத்திற் கொள்ளாமல் வாளாவிருப்பது நீதியாகாது. உடனே சுகம் அடைய முற்பட வேண்டும். முற்பட்டு முயன்று வேலை செய்ய நமது தலைநாட்டில் உயர்தரப் படிப்பாளிகள் ஒருவரும் இல்லாமற் போகவில்லை. அவர்களெல்லாம்,—

“சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்”

என்னும் தமிழ் மறையைச் சமயம் கொண்டு ஒரு முறையாவது பார்த்து நமது “தென்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கம்” என்னும் பெயரிய பெருங் கூட்டத்தை முதன் முதல் காஞ்சிமா நகரில் கூட்டி நடத்தல் வேண்டும். இக்காலத்தில் சபைகளினால் ஏற்படுகிற நலங்கள் ஒன்றிரண்டல்ல என்பது நமது தலை நாட்டாருக்குத் தெரியாமற் போகாது. இவ்விஷயத்தில் நமது தலை நாட்டாரும், கல்வி கேள்விகளிற் சிறந்த உயர்தரக் குடும்பத்தினரும் ஆகிய ஸ்ரீமான் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் சிறிது முயன்றால் கூட்டத்திற்கு ஆகவேண்டிய காரியங்கள் எல்லாம் வெகு சுலபமாக நடக்கும்.

கு - பு:—முதலியார் அவர்கள் இச் “சேங்குந்த மித்திரன்” என்னும் இப் பத்திரிகை நமது நாடுகளிற் பரவ ஏற்பாடு பல செய்ய முன் வரவேண்டும்.



# தலைநாட்டின் கடமை

[ஸ்ரீமான் C. P. முதலியார் அவர்கள் B.A., B.L.,]

தமிழ் மக்கள் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் சென்னை இராஜதானியில் தொடங்கியதன் பின்னர், பார்ப்பனர் அல்லாத ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் தங்கள் அபிவிருத்தியைக் கருதி மிகுதியான வேலை செய்யத் தொடங்கி இருக்கின்றனர். ஆனால், செங்குந்தராகிய நாம் நம் சமுதாயத்தாரின் நன்மையைக் கருதி வேண்டிய அளவு ஒரு வேலையும் செய்யாதிருப்போமாகில் அது மிகவும் விசனிக்கத் தக்கதன்றோ?

ஆகையால், நாம் நம்மரபினரின் அபிவிருத்தியைக் கருதி வேலைகள் பல செய்யத் தொடங்கவேண்டும். வருடத்துக்கு ஒரு முறையேனும் “தென்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கம்” என்னும் நம்மவர் பெருங் கூட்டத்தைச் சென்னை இராஜதானியிலுள்ள முக்கிய பட்டணங்கள் ஒன்றில் நடத்தவேண்டும்.

வருடத்துக்கு ஒரு முறை ஒரு பெரிய கூட்டத்தை ஏதாவது ஒரு முக்கிய நகரத்தில் நடத்தினால் மட்டும் போதாது. நம் மரபினர் இருக்கும் ஒவ்வொரு நகரிலும் கிராமத்திலும் கிளைச் சபைகள் ஏற்படுத்தவேண்டும். அவைகள் வருடமுழுவதுமே உண்மையான வேலைகளைத் திறமாகவும் தீவிரமாகவும் செய்து கொண்டுவரவேண்டும்.

நம்மவர் சுமார் நான்கு லக்ஷம் ஜனங்கள் சென்னை மாகாணத்திலிருப்பதாக ஜனகணிதம் சொல்லுகிறது எனினும், நம்மவருள் ஒருவரேனும் சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்றுச் சட்டசபைக்குள் பிரவேசிக்க முடியாததாயிற்று. அடுத்த தேர்தலிலாவது நம்மவருள் ஒருவர் தேர்தலில் வெற்றி பெறுவரோ என்பதை உறுதியாகச் சொல்லவும் முடியாது. ஆதலால், நாம் செய்யவேண்டியது என்னவென்றால், கவர்ன்மென்டாரிடம் நம்மவரின் ஜனத் தொகையையும் நம் குறைகளையும் கூறிக் கல்வியறிவும் செல்வாக்கும் ஐசுவரியமுமுள்ள நம்மவர் ஒருவரை நாமினேட் செய்யும்படி வற்புறுத்த வேண்டும். கவர்ன்மென்டாரை இங்ஙனம் செய்யச் செய்வது

இலேசான காரியம் அன்று. ஆனால், நாம் ஒரு பலமான சபை ஒன்றைக் கூட்டி அச் சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிறு கூட்டத்தினர் டெபுடேஷனாகச் சென்று கவர்னரையும், கவுன்சில் மெம்பர்களையும் மந்திரிகளையும் பார்த்து நம் குறைகளைத் தைரியமாக எடுத்துக் கூறி நம்மவரில் ஒருவரைச் சட்டசபை மெம்பராக நாமிநேட் செய்யும்படி கேட்டுக் கொள்வோமானால் நாம் உண்மையில் வெற்றி அடையலாம்.

சென்னை இராஜதானியின் பற்பல பாகங்களில் இப்போதிருக்கக் கூடியனவும், இனிமேல் ஏற்படுத்தக் கூடியனவுமான "செங்குந்த சபைகள்" இது விஷயமாகத் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாருக்குத் தந்தி மூலமாகவும் கடித மூலமாகவும் அடிக்கடி அறிவிக்க வேண்டும்.

நம்மவர் 'பெருங்கூட்டம்' சிறப்பாக நடைபெற வேண்டுமானால், தனவந்தர்களும் கல்வி யறிவாளர்களும் கலாசாலையில் பட்டங்கள் பெற்றவர்களும் மற்றவர்களும் பெருமுயற்சி செய்ய வேண்டும். நாம் சென்னை இராஜதானியில் ஒரு ஜனத்தொகையுள்ள சமுதாயத்தார். தனவந்தர்களும் கல்வியாளர்களும் ஒவ்வொரு ஜில்லாவிலும் அநேகர் இருக்கின்றனர். அவர்களெல்லாம் தங்களுடைய பெரும் வேலைகளுக்கிடையில் ஒரு சிறு சமயத்தை நம் சமுதாய அபிவிருத்திக்காகச் செலவு செய்வார்களானால் நம் 'கூட்டம்' வெகு சிறப்பாக நடைபெறும் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமே இல்லை.

சாதாரணமாக நம் நாட்டில் கூட்டங்கள் டிசெம்பர் மாதக் கடைசி வாரத்தில் நடைபெறுவது வழக்கம். நம்மவர் கூட்டமும் அச் சமயத்தில் நடை பெறுவதுதான் சௌகரியமாக இருக்கும். ஆனால், டிசெம்பர் மாதம் வருவதற்கு இன்னும் பன்னிரண்டு மாதங்கள் இருக்கின்றன. நம் 'கூட்ட' விஷயமாக வேலைகளைச் செய்ய இப்பொழுதே ஆரம்பிக்கவேண்டும். இப்பொழுது சோம்பலுடன் இருந்துவிட்டு, டிசெம்பர் மாதம் நெருங்கினதும் வேலைசெய்யத் தொடங்குவோமானால் 'கூட்டம்' மிகச் செம்மையாய் நடைபெறாது.



ஆகவே, நம்மரபினரில் செல்வாக்கும் கல்வி யறிவுமுள்ள பெரியோர்கள் நம்மவரது 'கூட்டம்' இன்றி யமையாமையை நன்குணர்ந்து அதனைச் செவ்வையாய் நடத்துவதற்கு முன் வந்து வேண்டிய உதவியைச் செய்யவேண்டும். அவர்களது அபிப்பிராயத்தை இச் "சேங்குந்த மித்திரன்" முதலிய பத்திரிகைகளுக்கு எழுதி மற்றவர்களையும் தங்களுடன் சேர்த்து உழைக்கத் தூண்டவேண்டும். சில பெரியோர்கள் இப் பெருங்காரியத்தை நடத்த ஊக்கத்துடனே முன் வருவார்களானால், அவர்களைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் உதவி செய்ய நிச்சயமாக முன் வருவார்கள். அதனால், நம் "கூட்டம்" அழகாக முழு வெற்றியுடன் நடைபெறும்.

இப் பெருங்காரியத்தைச் செவ்வனே நடத்த இப்பொழுதே சென்னைமாநகரில் ஒரு "சிறு சபை" ஏற்படுத்த வேண்டும். சுணக்கமின்றி கூட்டத்தின் விஷயமாய் ஆகவேண்டிய முதல் வேலைகளைச் செய்யத் தொடங்கவேண்டும்.

செங்குந்தர்கள் இருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் கிளை நாட்டிலும் நகரத்திலும் கிராமத்திலும் "சேங்குந்த சபைகள்" விரைந்து ஸ்தாபித்திட வேண்டும். அச் சபைகளிலிருக்கும் கல்வியறிவும், செல்வாக்கும், வாக்குவன்மையும் உடைய அங்கத்தினர்களைப் பிரதிநிதிகளாகக் கூடும் கூட்டத்துக்கு அனுப்பிக் கொடுக்கவேண்டும்.

சென்னை இராஜதானியில், அநேக வகுப்பார் வருடந் தோறும் தங்கள் கூட்டத்தை நடத்தி அதனால் பலவிதமான நன்மைகள் அடைந்து வருகின்றார்கள். நாமும் இவ்வருடம் சென்னை மாநகரில் 'பலமான கூட்டம்' ஒன்று கூட்டி நம் சமுதாய அபிவிருத்திக்குச் சார்பான 'அஸ்திவாரக்கல்' போடுவோம்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்பது பொய்யாமொழி.

இதற்கு எல்லாம் வல்ல முருகக்கடவுள் நம்முடன் நின்று நமக்கு உதவிபுரிவானாக.

# நமது முன்னேற்றம்

[ஸ்ரீமான் A. S. முத்தையா முதலியார் அவர்கள் B.A.]

எனது அன்பிற் சிறந்த சகோதரர்களே! நமது முன்னேற்றம் என்னும் விஷயத்தைப் பத்திரிகை வாயிலாகவும் பிரசங்க வாயிலாகவும் அறிந்திருந்தும், யாதொரு முயற்சியும் சில இடங்களிற் செய்யாததைப்பற்றி நினைந்து மறுபடியும் வற்புறுத்துவதற்காக எழுதலானேன். "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழி இங்குக் கவனிக்கற்பாலது. ஊக்கங் குன்றி இருக்கின்ற நமது சகோதரர்களுக்கு இதைக் கண்ணுற்ற மாத்திரத்தில் ஒருவித உள்ளக்கிளர்ச்சி உண்டாகும் என்று நினைக்கின்றேன். கல்வியில் முன்னேற்றம் அடைந்திருக்கிற மரபினருக்கு இவ்விஷயத்தைப் பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. இனிமேல் முன்னேற்றம் அடையவேண்டி இருக்கின்ற மரபினர்களுக்கு அடிக்கடி ஞாபகம் ஊட்டவேண்டும். ஆகையால் இதை இங்கு எழுதுவது மிகையாகாது.

ஒவ்வொரு மரபும் எதில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதை நன்கு ஆலோசிக்க வேண்டும். அவ்விதம் ஆராயுமிடத்து முதன் முதலில் முன்னேற்றம் அடையவேண்டியது கல்வியிலேதான் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கது. இதில் முன்னேற்றம் அடைந்தால் மற்ற காரியங்கள் பின் தொடர்ந்து வரும். ஆகவே நமது மரபு கல்வியில் நிரம்பவும் பின்னடைந்திருக்கின்றது என்பது யான் சொல்லாமலே தெரியவரும். நமது செல்வக் குழந்தைகள் கல்வியை நன்றாய்க் கற்று முன்னடையச் செய்வது நம்மில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமையாகும். குழந்தையைப் பெற்ற தகப்பனது கடமை பெறுகிறதும் வளர்க்கிறதும் மாத்திரமன்று. மிருகங்களும் பட்சிகளும் மற்றைய ஜெந்துக்களும் தாங்கள் பெற்ற குழந்தைகளை வளர்க்கின்றன. அதனால் தகப்பன் செய்யவேண்டிய கடமை முக்கியமானது ஒன்றாகும். அதாவது நமது தெய்வப்புலவர் திருவள்ளுவனார்,—

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"



என்று திருவாய் மலர்ந்தருளியபடி கல்வியில் முன்னடையச் செய்வதேயாம். ஒரு தந்தை இந்தக் கடமையைச் செய்யத் தவறுவானாயின், அவன் ஒரு பகுத்தறிவுடைய மனிதனாகான் என்பது உண்மை. பிறந்த குழந்தைகளுக்கு ஒன்றுந் தெரியாது. அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது தாய் தகப்பனுடைய கடமை. குழந்தைகளுக்குக் கண்களைத் திறப்பது ஓர் உண்மைத் தந்தையினது கடமையாம். கண்கள் என்றால் நாம் பார்க்கும் ஊனக் கண்கள் அல்ல,—

"எண்ணும் எழுத்தும்-கண்ணெனத் தகும்" கொன்றைவேந்தன் என்றும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" திருக்குறள்

என்றும் அறிவுடையோர்கள் கூறியிருப்பதை நன்கு ஆராய்ந்து உணரவேண்டும். பாஷைகற்பிப்பதும் கணக்குக்கற்பிப்பதும் ஆகிய இவ்விரண்டுமே கண்கள் திறத்தலாம் எனச் சொல்லுகின்றார்கள். இத்தகைய கண்களைத் திறக்கப்படானாயின் அம்மகன் கண்களை இழந்தவனாகின்றான்., அவன் சிறு பிராயத்தில் கல்வியின் பெருமையை உணராது அதைப் பயிலக் கஷ்டப்படுகின்றான். தகப்பனும் மகன் நிரம்பவும் கஷ்டப்படுகிறானென்று அவனைப் பள்ளிக்கு அனுப்பாதுவிடுகிறான். அறியாப் பருவத்தில் கல்வியைக் கஷ்டமென்று நினைத்த அம்மகன் தனது ஆயுள் நாளில் மிகவும் வருந்துகின்றான். 'அல்நாஷர்' என்ற ஒரு வணிகன் மகன் சிறுவயதில் தனக்குக் கல்வி கற்பியாத தந்தையைப்பற்றி,—

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே யென்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னே தந்தை யாகிய பாதகனே"

என்று மனம் வருந்தினன். இவ்விதம் ஒவ்வொரு மகனும் தன் தந்தையைப்பற்றி வருந்துவான் என்பதற்கு ஐயமில்லை. இவ்விதம் வருந்துவதை யான் காதாரக் கேட்டிருக்கின்றேன். நீங்களும் கேட்டிருப்பீர்கள். இவ்விதமெல்லாம் தெரிந்திருந்தும் பின்னும் அத்தகைய குற்றத்திற்கு ஆளாவது தகுதியாகுமோ? தெரியாமல் ஒருவன்

குற்றஞ் செய்வானாயின் அவனுக்குத் தண்டனை குறைவு. ஆனால், தெரிந்து செய்வானாயின் அவனுக்குத் தண்டனை கூடுதலாகும். ஆகவே குற்றம் என்று தெரிந்து அக் குற்றத்திற்குத் திரும்பவும் ஆளாவது கொடிய பாவச்செய்கையாகும் என்பதை வற்புறுத்துகின்றேன். இதை அறிந்து ஒவ்வொரு தந்தையும் தன் குழந்தைகளைப் படிப்பிப்பது தனது முதற் கடமை என்று உண்மையில் உணரவேண்டும்.

இதுகாறும் சொல்லி வந்தவை ஆண்மகனையே குறிக்கும் என்று நினைப்பதற்கு இடமாகும்; அவ்விதமன்று. மகளையும் மகனைப் போலவே எண்ணி கற்பிக்கவேண்டும். நமக்கு இரண்டு கண்கள் இருக்கின்றன. அவைகளில் உயர்வு தாழ்வு எதற்குக் கொடுக்கப்படும்; இரண்டும் ஒரே தன்மைத்தன. அதுபோலவே ஒருவர் ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் சமமாக எண்ணி வேண்டியவைகளைச் செய்யவேண்டும். ஆண்கள் கல்வி பயில்வதற்குப் பெண்கள் கல்வி பயிலவேண்டுவது அவசியமாகும். தாய்மார்கள் கல்வி கற்றிருந்தால்தான் தங்களுக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்குச் சிறிது கல்வி கற்பிக்க எண்ணமுண்டாகும். பிள்ளைகளும் கல்வியில் விருத்தி அடையும். அவ்விதம் கல்லாத தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அநாகரிகமான பேச்சுகளைச் சொல்லிக் கொடுப்பார்கள். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிபோல் அவர் துஷ்டப் பிள்ளைகளாவர். 'ஒரு சமுதாயம் விருத்தி யடைய வேண்டுமானால், பெண்களும் கல்வி கற்றிருக்க வேண்டும்' என்று அறிவுடையோர்கள் மொழிந்திருக்கின்றார்கள். பெண்களுக்கும் கல்வி இன்றியமையாதது என்பதைத் தெளிவுறுத்தத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் சுருக்கமாக,—

> " தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு "

என்றும்,

> " எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்றும், ஆண்பெண் இருவருக்கும் பொதுவாகக் கூறிப்போயிருக்கின்றார். மாந்தர், உயிர் என்ற சொற்கள் இருபாலார்க்கும் பொது



வானவை. இன்னும் பழைய நூற்களை ஆராய்வோமாயின் பெண்களுக்கும் கல்வி இன்றியமையாதது என்பது நன்கு புலப்படும்.

> " குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
> நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்கற்ற
> கல்வி யழகே அழகு " என்பது நாலடியார்

ஆகவே பக்ஷபாதமின்றி ஒரு தந்தை இருபாலாரையும் ஒன்று போல கற்பிக்க வேண்டும். ஓர் இல்லறமானது சரியாய் நடைபெற வேண்டுமாயின் கணவன் மனைவி ஆகிய இருவரும் கற்றவர்களாய் இருக்கவேண்டும். கணவன் கற்றவனாயும் மனைவி கல்லாதவளாயும் இருப்பார்களாயின், அவர்கள் இருக்கும் இல்லில் ஒரு நாளும் சச்சரவு இன்றி இராது.

> " காதல் மனையாளுங் காதலனு மாறின்றித்
> தீதிலொரு கருமஞ் செய்பவே—ஓதுகலை
> எண்ணிரண்டு மொன்று மதியின் முகத்தாய் நோக்கினால்
> கண்ணிரண்டு மொன்றையே காண்" என்பது நன்னெறி

இதற்குமாறாக சிலவீடுகளிற்காணலாம். ஆனால், பெரும்பாலும் இவ்விதமேஇருக்கக்கூடும்என்று துணிகின்றேன். இல்லறம்என்றவண்டி சரியாய் இழுபடவேண்டுமாயின் காதலன் காதலி ஆகிய இருவரும் கற்றவர்களா யிருக்கவேண்டும். பரமேஸ்வரன் தனது இடதுபாகத்தில் பார்வதியை வைத்திருக்கின்றார் என்பது பழைய நூல்களால் அறியக் கிடக்கின்றது. இதை உற்றுநோக்குவோமாயின் பெண்கள் சுகத்தைத்தரக்கூடிய இயந்திரங்கள் என்று நினைப்பது தவறு. அவர்கள் ஆடவர்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவிசெய்யப் பாத்தியதை உடையவர்கள். அங்ஙனமிருக்க ஆடவர்கள் கற்றுப் பெண்கள் கல்லாதிருப்பது பாதி உடலை அலங்கரித்துப் பாதி உடலை அலங்கரியாததை ஒக்கும். ஆகவே கல்வி இருபாலர்க்கும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது என்பது நன்கு விளங்கும்.

இனி, கல்வியைக் கற்பிப்பதற்கு எந்த வழியை அனுசரிக்க வேண்டும் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். நம் மரபினர் காலபேதத்தினால் கைக்கொண்ட நெசவுத் தொழிலைப் பெரும்பான்மை

யோர் பரம்பரையாகக் கையாண்டு வருகிறார்கள். சிறுதொகையினர்கள்தான் வியாபாரிகளாகவும் தனவந்தர்களாகவும் இருக்கின்றார்கள். இத்தொழிலாளர்கள் தங்கள் செல்வக் குழந்தைகளைக் கல்வி பயில்விக்காது விடுகின்றனர். ஏழு அல்லது எட்டு வயது பருவம் வந்ததும் மகனை மேற்கூறிய தொழிலிலேயே பழக்குகின்றார்கள். படித்து உத்தியோகத்திற்குப் போகவா என்றும் நினைக்கின்றார்கள். அவன் வளர்ந்ததும் ஒன்றும் தெரியாது கண்மூடித்தனமாகத் திரிகின்றான். இவ்விதமே நம் மரபினர்களுக்கு இடையில் அநேகரைப் பார்க்கலாம். ஒரு கடையில் போய் கடனுக்காக ஏதாவது வாங்கிவிட்டுக் கடைக்காரன் கை எழுத்துப் போடச்சொன்னால் "எனக்குத் தெரியாது; நான் தடிபோடுகின்றேன்" என்று வாய் கூசாது மொழிகின்றான். கடைக்காரன் கடன் கொடுப்பதற்கும் அஞ்சுகின்றான். அந்தோ! தன் பெயரை எழுதத் தெரியாது என்று சொல்வது எவ்வளவு குறைவான விஷயம் என்பதை ஆராய்வார்க்கு நன்கு விளங்கும். மேலும் இந்தத் தொழிலாளர்கள் நம்மிடத்தில் ஏராளமான பொருளில்லையே எங்ஙனம் படிப்பது என்று நினைத்துக் கல்வி பயில்விக்கின்றார்களில்லை.

இத்தகையஎண்ணத்தை நீக்குவதற்குக்கீழ்க்கூறும்விஷயத்தை ஆலோசித்தல்வேண்டும். அவர் அவர்மக்களை அவர் அவர்படிப்பிப்பார்கள்என்றுநம்மரபினர்களில் எண்ணுவதற்கு இடமில்லை. ஆகையால் சமுதாயத்திலுள்ள தனவந்தர்கள் படிப்பாளிகள் ஒன்று சேர்ந்து ஏழைப்பிள்ளைகளைப் படிப்பிப்பதற்காக ஒரு மூலதனம் ஏற்படுத்த வேண்டும். அம்மூலதனத்திலிருந்து கிடைக்கப் பெறும் வட்டியைக்கொண்டு இப் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தல் வேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்த முயல வேண்டும். இவ்வண்ணம் நடத்தாதுபோனால் நம் மரபினர்களில் கற்றவர்களைக் காண முடியாது. இப்போது கற்றவர்கள் யார் என்று ஆராயுமிடத்து ஆங்கிலக் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் தான். நம் மரபினர்களுக்கு இடையில் அத்தி பூத்தாற்போல் இரண்டொரு பட்டதாரிகளைக் காணுகின்றோம். இவர்களைக் கண்டு திருப்தி அடைந்துவிடக்கூடாது. ஒரு சமுதாயம் முன்னேற்றமடைந்திருக்கின்றது என்று சொல்லவேண்டுமாயின்



அநேக பட்டதாரிகள் வெளிவர வேண்டும். அங்ஙனம் வருவிப்பதற்கு மேற் கூறிய உபாயமே சரியானவழியாகும். இப்போது கல்வியில் பின்னடைந் திருக்கின்ற ஜாதியார்கள் இம்மாதிரி வழி ஏற்படுத்தி முன்னேற்றமடைய முயற்சிக்கின்றார்கள். அவ்விதம் இருக்க நம் மரபினர்கள் ஏன் வாளா இருக்கின்றார்கள்? அவர்களுக்கு இன்னும் உணர்ச்சி வரவில்லைபோலும்! நாம் இந்தச் சமயத்தில் இவ்வித வழியைப் பின்பற்றி முற்போக்கு அடையாவிடில் பின்னால் எப்போது நாம் முன்னேறுவது? எனது ஆர்வம் மிகுந்த சகோதரர்களே! மேற் கூறியவைகளை நன்கு ஆராய்ந்து செய்வீர்களாக! கடவுளும் கண்விழித்துப் பார்ப்பாராக! நம் மரபும் க்ஷேமத்தை அடைக!

நாம் முக்கியமாக முன்னேற்றம் அடைய வேண்டியது கல்வியிலேயே தான் என்று கூறினேன். இனிக் கூறப்போகும் விஷயத்திற்கும் கல்விதான் முக்கியமான ஆதாரம்,—

"அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவல்ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங் கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்ற குமர குருபர சுவாமிகள் மொழி ஈண்டுக் கவனிக்கற்பாலது. நமது ஆயுள் நாளை உபயோகமாகக் கழிப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது கல்வி.

அடுத்த படியாக ஒற்றுமை நமது முன்னேற்றத்திற்கு ஒரு வழியாகும் என்று கூறலாம். மேற்கூறிய காரியங்களை முடிப்பதற்கும் இம் மரபினர்களின் ஒற்றுமை வேண்டத்தக்கது. ஒற்றுமையின்றி ஒரு காரியமும்முடியாது என்பது திண்ணம். இப்போது சில இடங்களில் ஒற்றுமையின்றிநானாவிதமாகப்பணத்தைச் செலவழிக்கின்றார்கள். மரபினர்களின் இடையில் கட்சிபேதம் உண்டாக்கித் தங்களுடையஅறியாமை மிகுதியால் அனாவசியமாகக்கோர்ட்டிற்கு ஏராளமான பொருளை வாரி இறைக்கின்றார்கள். இம்மாதிரி செலவழிக்கப்படும் பொருளைச் சேர்த்து மேற்கூறிய கல்வி விஷயத்திற்குச் செலவழிப்பார்களாயின் எத்தனையோ படித்தவர்களை நமது கண்ணாரக் காணலாம் என்பது உறுதி. இங்ஙனம் வீண்செலவு

செய்கிற இடங்களை எனக்குக் குறிப்பிட மனமில்லை இதைக்காணு யார் மனந்தான் நோகாது. ஆகவே ஒற்றுமை அவசிய மென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது. ஒற்றுமையைப் பற்றி அடுத்த வியாசத்தில் விரிவாக எழுத எண்ணங்கொண்டிருப்பதால் இதோடு நிறுத்துகின்றேன். இவ்வித ஒற்றுமை வருவதற்கும் கல்வி அவசியமானதே.

அடுத்த படியாகப் புதிய முறையில் நமது மரபினர்கள் கைத்தொழிலைச் செய்வார்களாயின், அதுவும் முன்னேற்றத்திற்கு ஒரு வழியாகும். அநேக இடங்களில் பழையபடியே கைத்தொழில் இன்னும் நடந்து வருகின்றது. அதனால் அதிகம் நெசவு நெய்து ஊதியம் கிடைக்க வழியில்லாமல் ஆகின்றது. இப்போது சில இடங்களில் காணப்படுகின்ற விசைத்தறி (அல்லது அடிதறி) உபயோகிப்பார்களாயின் அதிகம் முழம் நெய்யலாம். சாதாரண தறியில் நாலு அணு கிடைத்தால் இந்தத் தறியில் எட்டு அணு கிடைக்கும் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம். ஆகவே எது லாபகரம் என்று கவனியுங்கள். இஃதன்றியும் புதுவதாகப் பலதரங்கள் நெய்து அறுவாக்க வேண்டும். சில இடங்களில் 20 வருடங்களுக்கு முன்னால் நெய்துவந்த தினுசே இப்போதும் நெய்து வருகின்றார்கள். ஆடைகளை நெய்வதில் மாற்றம் அடிக்கடி வேண்டும். இஃதெல்லாம் அதிக வருமானத்தைக் கொடுக்கும்.

இனிமேல் வியாபாரஞ் செய்வதும் நமது முன்னேற்றத்திற்கு ஒரு வழியாகும். எப்போதும் கைத்தொழிலிலேயே காலம் கழிப்பானுயின் அவன் அதிக பணம் சம்பாதிப்பதாக என் அறிவிற்குத் தோன்றவில்லை. கைத் தொழிலோடு முயன்று வியாபாரத்திலும் பழக வேண்டும். இதற்கு இன்றியமையாது வேண்டியது கல்வி. வியாபாரத்தைப் பற்றி இனியொரு முறை விரிவாக எழுத நினைத்திருப்பதால் இதோடு நிறுத்துகின்றேன்.

ஆகவே மேற்கூறிய விஷயங்களை எல்லாம் பார்த்து விட்டுவிடாது கூடுமானவரையிலும் அனுஷ்டிக்க முயலல் வேண்டும். செங்குந்தர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் அவர்களது பழைய



வீரத்தனத்தையும் வைராக்கியத்தையும் காண்பிக்கவேண்டும். இப்போது வெளி வருகின்ற இவ்வருமைத் தோழனாகிய "செங்குந்த மித்திரன்" என்னும் பத்திரிகையை நாம் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து வாசியாத நண்பர்களையும் அழைத்து வாசித்துக் காண்பித்து இதற்குச் சந்தாதாரராகச் சேரச் சொல்லவேண்டும் இது தான் இப்போது முந்தி செய்ய வேண்டிய வேலை.

---

# கதரின் கட்டுரை

[ஸ்ரீமான் தி. அருணாசல முதலியார் அவர்கள்]

என்னுடைய வாசஸ்தலம் வந்தவாசி தாலுக்காவில் உள்ள ஒரு சிற்றூர். தகுந்த மனைவியும் இரு குழந்தைகளும் எனக்குண்டு. அதில் இளங் குழந்தை பெண்ணாகும், என் மனையாட்டியின் பிறந்தகம் 20 மைலுக்கப்பாலுள்ள ஒரு கிராமம். இரயில் பாதையல்ல. தற்கால புதுநாகரீகம் அதிகம் புகுந்த ஊருமல்ல. சுருங்கச் சொல்லுமிடத்து மகாத்மா காந்தியடிகளையும் கதரையும் பற்றி எனக்குத் தெரிந்த அளவுகூட அவ்வூரில் உள்ள ஜனங்களுக்குத் தெரியாது.

அவ்வூரில் வருஷமொரு முறை தைமாசத்திய பூசத்திலே கோவிலில் உற்சவம் செய்வது வழக்கம். எங்கேனும் ஓர் ஊரில் ஒரு விசேஷம் என்றால் அவ்வூர் ஜனங்கள் தங்கள் தங்கள் பந்து ஜனங்கள் இருக்கும் ஊருக்குச் சென்று உத்சவத்துக்கு வர வேண்டுமென்று அழைத்து வருவது நமது மூதாதைகளின் வழக்கமல்லவா? அதுபோலவே எனது மாமனார் தைப்பூச உத்சவத்திற்கு என்னை வந்தழைத்துச் சென்றது விந்தையாகுமா? நானும் ஓராண்டு அயல் நாடு சென்று புரட்டாசி மாதம் திரும்பினவன். அதுவரை மாமனார் வீடு செல்லாதிருந்தது எனக்கும் சந்தோஷக் குறைவாகவே இருந்திருக்குமென்பதைக் கூச்சத்துடனுவது ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே. மனையாளின் பிறந்தகமல்லவா? அதற்கு ஒரு தனி விசேஷம் உண்டன்றோ? அதிலும் எனக்கு அங்கே செல்வதென்றால் அளவற்ற இன்பம் என்னை யறியாமலே அது வளரும்சக்தி பெற்றிருப்பதாகவும்

அறிந்தேன். சொல்லவந்த கதையை விட்டு எங்கேயோ சென்று விட்டேன். மாமனார் வந்து கூப்பிட்டாரென்று சொன்னேனல்லவா? குடும்பத்தோடு வருவதாகவும் சொல்லி யனுப்பிவிட்டேன். இது மார்கழி மாதம் 28 தேதியன்று நிகழ்ந்தது.

தைமாதம் 4தேதியன்று வைகறையிலேவீட்டுச் சாமான்களை ஒரு அறையில் போட்டுப் பூட்டிச்சாவியை நான் எடுத்துக்கொண்டு வீட்டு தெருக் கதவைப் பூட்டிச் சாவியை அண்டைவீட்டாரிடம் கொடுத்துப் பார்த்துக்கொள்ளச்சொல்லிவிட்டு வண்டிக்கார அரங்கசாமியின் கட்டை வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு மாமனார் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டேன். அரங்கசாமி ஒரு கதரபிமானி. கதர் கட்டாதவர்களை அவன் விகடமாகப் பரிகசிப்பது வழக்கம். என்னிடத்தில் மட்டும் கொஞ்சம் மரியாதையாக நடந்து கொள்ளும் சுபாவம் அவனுக்குண்டு. எங்களூரிலே கதர் தொண்டர்களென்று சொல்லிக்கொண்டு சிலர் தெருவிலே கூவிக் கொண்டு கதர் விற்பதை நான் காண்பதுண்டு. நான் அதை வாங்குவதுமில்லை. வாங்குவதுதானில்லை என்றாலோ, அவர்களைப் பற்றி நான் கேவலமாகப் பேசுவதுமட்டுமுண்டு. இவ்வருஷ தீபாவளிக்கு ஜவுளி எடுக்க நான் கடைக்குச் சென்ற பொழுது என் மனையாள் கொஞ்சம் முரடாக ஏனை வேட்டி வேண்டுமென்று சொன்னாள். குளிர்காலத்துக்கு உதவக் கூடுமென்று நான் இளப்பமாக நினைத்திருந்த இந்தக் கதரில் ஒரு ரூபா பன்னிரெண்டணா கொடுத்து 6 முழ வேஷ்டி ஒன்று வாங்கி வந்து ஒரு மூலையிலே போட்டிருந்தேன். அது எனக்குத் தெரியாமலே என் மனையாள் மூலம் குழந்தைக்காக எங்களுடன் வந்திருக்கிறதுபோலும்.

திருவிழாவிலே பலவூர் ஜனங்களும் வந்திருந்தார்கள் நான் அன்று என்னை விசேஷமாக அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்று மனதுக்குள்ளே எண்ணம். ஸ்நாநம் செய்துவிட்டுச் சாப்பிடுகிற வரையில் ஒரு சிறிய துண்டை இடுப்பிலே சுற்றிக் கொண்டு சாப்பிட்டுவிட்டுப் பின் நல்ல வஸ்திரம் உடுத்திக் கொள்ளலாமென்று சுற்றிப் பார்த்தேன். இந்தக் கோணிபோன்ற துப்பட்டிதான் அப்பொழுது என் கண்ணில்பட்டது. கொஞ்ச நேரந்



தானே என்று அரை மனதோடு அதை இடுப்பில் கட்டிக்கொண்டு வாசலிலே நின்று தலைமயிரை உலர்த்திக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது அவ்வூர் வாசிகளாகிய இரண்டு சிநேகிதர்கள் தெருவின் வழியே சென்றார்கள். அதில் வயதில் குறைந்த ஒருவன் பெரியாரை நோக்கி, "அண்ணே அதோ நிக்கிறாரே நம்ம வேலுப்பிள்ளை மறுமவேன். பாத்துக்கிட்டியா அவுரு காந்தி ஆளுபோலே இருக்கு. அவுரு கட்டி இருக்கிற வேட்டி தாண்ணே காந்திவேட்டி. வாண்ணே அவுரைப் போய்ப் பார்ப்போம்" என்றுபேசிக்கொண்டு என் சமீபம் நெருங்கினார்கள். நெருங்கியவுடன் நான் ஒருவாறு அவர்கள் மனதை ஊகித்து உணர்ந்துகொண்டேன். கைகளிரண்டும் அவர்களை அறியாமலே கட்டிக் கொண்டன. உரோமம் சிலிர்த்து மெய்ம்மறந்து விட்டார்கள். என்னை நோக்கிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்ற காட்சி என்னையும் உருக்கி விட்டது. அத்துடனும் அவர்கள் நிற்கவில்லை. உடனே போய் தங்கள் பக்கத்திலிருந்த குடும்பத்தினரையும் அழைத்து வந்து என்னை ஒரு குருவுக்கு ஒப்பாக்கி விட்டார்கள். நான் நிரம்ப வெட்கிப்போனேன்.

வாசகர்களே! என்னுடைய நெஞ்சம் அப்பொழுதிருந்த நிலைமையை எழுத எனக்கு வன்மை போதவில்லை. என் நெஞ்சம் நிரம்பக் குன்றிப்போயிற்று. அதே சமயத்தில் கதரை நீக்கி வேறு வஸ்திரம் தரிக்கவும் என் மனம் சங்கோஜப்பட்டுவிட்டது. இந்தச் சமயத்தில் அந்தப் புளிக்கார அரங்கசாமி ஒரு பெரியார் கூறியிருப்பதாகக் கீழ் கண்டவற்றை எல்லார் முன்னிலையிலும் ஒரு பத்திரிகையிலிருந்து வாசித்துக் காட்டினான்.—

"வயது சென்ற ஒரு குருட்டுக் கிழவி நூல் நூற்கிறாள். அவளுக்கு இரவும் பகலும் ஒன்று. உண்மையில் இவள் குருடியா எனச் சோதிக்க என் நண்பர் நூற்கும்பொழுது நூலிழையைப் பிடித்துக்கொண்டார். இழை அறுந்துபோயிற்று. உடனே இழை முனைக்காக அக்கிழவி தடவ ஆரம்பித்தாள். நண்பர்கள் கொல்லென்று சிரித்தார்கள். எனக்கோ அவமானமாய் இருந்

ததது. மகாத்மா காந்தியின் பாதங்களை தொட்டு வணங்க ஆயிரக் கணக்கான ஜனங்கள் எவ்வளவோ ஆசைப்படுகிறார்கள். அம் மகாத்மா இங்கிருந்தால் அப்பெண் மணியின் பாதங்களை அவர் தொட்டு வணங்குவாரென எனக்குத் தோன்றிற்று. எனவே அம் மூதாட்டியின் பாதங்களில் நமஸ்கரித்துவிடைபெற்றுக்கொண்டேன்"

"மகன்லால் காந்தி"

என்று வாசித்துக் காட்டி என்னிடம் உள்ள மரியாதையால் என்னையும் சமயம் பார்த்துக் குத்திவிட்டான். இது எனக்கோ, புண்ணில் கோலிட்டாற்போலாயிற்று. வேறே கதரும் என்னிடம் கிடையாது. கொஞ்ச நேரத்துக்காகத் தீராப்பழியாக அணிந்துகொண்ட நமக்கு இவர்கள் இவ்வளவு மரியாதை செய்வதென்றால், உண்மையான கதராபிமானிக்கு உலக ஜனங்கள் எவ்வளவு மதிப்புக் கொடுக்கக் கூடுமென்று நினைக்கும்போது ஏற்கனவே கதரின் உண்மையான பெருமையும் அதை யணிந்தாரது மதிப்பும் தெரியாத காலத்தில் உள்ள என்னுடைய அறியாமைக்காக மிக்கு வருந்தினேன். கதரில்லாமல் வெளியில் வரவெட்கி இரண்டு நாட்கள் உள்ளேயே இருந்து கதரைத் தருவித்து அணிந்துகொண்டே வெளிக் கிளம்பினேன். அதுமுதல் எனது குடும்பமும் கதர் மயமாயிற்று. என் முயற்சியாலும் செய்கையாலும் எங்களூர் முழுமையுமே கதர்மயமாக்கிவிட்டேன்.

---

# ஆசாரக் கோவை

[ஸ்ரீமான் திருவேங்கட நாதன்]

1. செய்ந்நன்றி அறிதல், பொறுமை யுடையவனாயிருத்தல், இனிய வார்த்தை பேசுதல், உயிர்ப் பிராணிகளுக்குத் தீங்கு செய்யாதிருத்தல், கல்வி கற்றல், உலக நடையை அறிந்து அதன்படி நடத்தல், அறிவுடையனாயிருத்தல், நல்லோரிடத்தில் நேசம் செய்தல் ஆகிய இந்த எட்டும் ஆசாரத்துக்கு (தூய வாழ்விற்கு) முதற் காரணங்களாகும்.



2. ஆசார வழியில் (நல்லொழுக்க வழியில்) நடப்பவர்கள் நல்ல குடிப்பிறப்பையும், பூரண ஆயுளையும், செல்வத்தையும், நல்ல அழகையும், நீர்நிலம் முதலியவற்றையும், சொற் செலவையும், கல்வியையும், தேகசுகத்தையும் அடைந்திருப்பார்கள்.

3. ஆசாரியன் முதலியவர்களுக்குத் தட்சணை (காணிக்கை) கொடுத்தல், வேள்வி செய்தல், தவம் செய்தல், கல்வி கற்றல் ஆகிய இந் நான்கையும் நாம் தவறாமல் செய்யவேண்டும். செய்யாமல் வாளாவிடுவோமாயின் அவைகளினால் நாம் பெறக்கூடிய நன்மைகள் அனைத்தையும் இழந்தவர்களாவோம்.

குறிப்பு:—இதில் வேள்வி செய்ய வேண்டுமென்று சொல்லப் பட்டது. வேள்வியாவது பிதிரர், தேவர், விருந்தாளிகள், சுற்றத்தார், தான் என்ற ஐந்து பேரையும் ஓம்பிக் காத்தல் இதனை.—

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

"தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்னும் திருக்குறள்களானும், அதற்குப் பரிமேலழகர் இயற்றியுள்ள உரையானும் உணரலாகும்.

4. இல்லற வாழ்க்கையை யுடைய ஒருவன், விடியற் காலத்தில் நித்திரையினின்று நீங்கி அடுத்த பகல், தான் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னவை என்று சிந்தித்து ஆராய்ந்து பின்னர் தாய் தந்தையரை வணங்கிக் காலைக் கடனை முடித்துத் தத்தங் கருமங்களைச் செய்யவேண்டும்.

5. எச்சில் பல வகைப்படும். அவைகளில் வாயில் ஊறுகிற உமிழ்நீரும், மலம் மூத்திரங்களைக் கழித்தபின் நீராடாமல் அசுத்தத்தோடிருத்தலும், இச்சை வயப்பட்டு ஆணும் பெண்ணும் சம்பந்தப்பட்டபின் நீராடாமல் அசுத்தத்தோடிருத்தலும் ஆகிய இவைகளே முக்கியமான எச்சில் என்று கருதப்படுகின்றன.

6. மேற் சொல்லப்பட்ட எச்சில்களோடிருப்பவர் பசுக்களையும், பார்ப்பனரையும், நெருப்பையும், தேவர்களின் உருவச்சிலை முதலியவற்றையும், தலையின் உச்சியையும் தொடக்கூடாது.

குறிப்பு:—இங்கு பார்ப்பனரை எச்சிலுடையவர் தீண்டக் கூடாதென்று சொல்லப்பட்டது. எல்லா உயிர்களிடத்தும் அன்போடுகூடிய சிந்தையுடன் அறமொன்றையே நோக்கமாக உடைய தனக்கென வாழாப்பிறர்க்குறியோராகிய அந்தணர்களேயாம்—

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" என்பது தமிழ்மறை

7. மேற் சொல்லப்பட்ட எச்சில்களை யுடையவர்கள் புலையர்களையும், சந்திரனையும், சூரியனையும், எரி நட்சத்திரத்தையும் கண்ணால் பார்க்கக் கூடாது.

குறிப்பு:—இங்குப் புலையன் என்று சொல்லப்பட்டது தாழ்த்தப்பட்ட வகுப்பாருள் ஒரு வகுப்பினராகிய புலையர் அன்று. எந்த வருணத்தினராயினும் அவர்களுள் புலைத்தொழில் செய்கிறவர்களையே புலையர் என்று சொல்லப்பட்டது.—

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்" என்பது பொய்யாமொழி

8. அறிவு வளர்ச்சியை விரும்புவோர் மேற் சொல்லப்பட்ட எச்சில்களுடன் இருக்கும்போது எதையும் படிக்கக்கூடாது; வாயால் பேசவும் கூடாது; நித்திரை செய்தலும் கூடாது.

9. பல் விளக்கல் முதலிய காலைக் கடன்களைச் செய்த பிறகு கடவுளை வணங்கி, பிறகு வேறு காரியங்களைத் தொடங்கவேண்டும். மாலை வேளைகளில் கடவுளை வணங்கும்போது நின்றுகொண்டு வணங்காமல் உட்கார்ந்து கொண்டு வணங்கவேண்டும். கடவுளை மாலைக் காலத்தில் நின்றுகொண்டு வணங்குவது மிகப் பெரிய குற்றமாகும்.

10. கடவுளை வணங்கும்போதும், கெட்ட கனவு கண்டபோதும், அசுத்தம் நேரிட்டபோதும், வமனம் (உண்டதைக் கக்குதல்) செய்த போதும், மயிர்களைந்து சவரம் செய்துகொண்டபின்பும், சாப்பிடும்போதும், பிற்பகலில் நித்திரை செய்தபின்பும்,



பெண்களுடன் இணையிழைச்சு நேர்ந்தபின்பும், அசுத்தமான தொழிலைச் செய்து அசுத்தத்தோ டிருப்பவர்களைத் தீண்டியவிடத்தும், மல மூத்திரம் கழித்தபின்பும் யாதொரு ஐயமுங் கொள்ளாமல் நீராடுதல் (ஸ்நாநம் செய்தல்) வேண்டும்.

11. ஆடையில்லாமல் (அம்மணமாக அல்லது நிர்வாணமாக இருந்து) நீராடுதல் கூடாது. ஒரு ஆடை மாத்திரம் அணிந்துகொண்டு சாப்பிடலாகாது. நனைந்த ஈர உடையை தண்ணீரில் பிழிதல் கூடாது. ஒரு சபையில் போகும்போது ஒரே ஆடையை மாத்திரம் உடுத்திக் கொண்டு போகலாகாது.

12. தலைக்குத் தேய்த்துக்கொண்ட எண்ணெயை வழித்து உடம்பின் மற்ற அவயவங்களில் தேய்க்கக் கூடாது. பிறர் உடுத்தியிருந்த அழுக்கு ஆடைகளையும் தீண்டக்கூடாது. ஒருவர் அணிந்திருந்த செருப்பை மற்றொருவர் ஒருபோதும் அணிந்துகொள்ளக் கூடாது.

13. தண்ணீரில் தோன்றுகிற தமது நிழலைப் பார்க்கக் கூடாது. நிலத்தைக் கீறுதலும் இரவுக் காலத்தில் மரங்களின் அருகில் போதலும் கூடாது. நெடுநாள் வியாதியா யிருப்பவன் நீரில் ஸ்நாநம் செய்வதற்குமுன் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்யலாகாது. எண்ணெய் தேய்த்துக்கொண்ட பிறகு தண்ணீரைத் தொடக்கூடாது. அன்றியும் புலைத் தொழிலாளரையும் பார்க்கக் கூடாது.

14. நீர் நிலைகளில் நீராடும்போது அதில் நீந்துதல் கூடாது; அதில் உமிழ்நீரை (எச்சிலை) உமிழ்தலும் கூடாது; நீரைக் குடைந்து கலக்கியும் வேறுவித விளையாட்டுகளையும் தண்ணீரில் விளையாடக் கூடாது; நெடுநாளாக எண்ணெய் தேய்த்து நீராடாமலிருந்தாலுங் கூட (தலையை விட்டு) கழுத்து வரையில் நீராடுதல் கூடாது; அதாவது கண்ட ஸ்நாநம் செய்யக்கூடாது.

15. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று சொல்லப்படும் ஐம்பூதங்களையும், அந்தணர்களையும், பசுக்களையும், சந்திர சூரியர்களையும், தன்னுடம்பு போலப் போற்றுதல் வேண்டும். அங்ஙனம் போற்றாமல் இகழ்ந்து தள்ளுவோமாயின் (நமது

தேகத்தில் ஐம்பூதங்களின் சம்பந்தம் இருப்பதால்) ஐம்பூதத்தின் அதிதேவதைகள் நமது தேகத்தினின்று நீங்கிவிடும்.

16. அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் ஆகிய இவர்கள் ஒப்பற்ற குரவராவர். ஆகையால் இவர்களை நாம் தேவர்களைத் தொழுதல் போலத் தொழவேண்டும்.

17. மேற்சொல்லப்பட்ட குரவர்கள் (அரசன், உபாத்தியாயன், தாய், தகப்பன், தமையன் ஆகிய இவர்கள்) சொல்லுகிற சொற்களை மீறி நடக்கக்கூடாது. ஒரு விரதத்தை ஆரம்பித்தவர்கள், அவ்விரதம் முற்றுப்பெறுமல் இடையே தடைப்படுமாயின் அதை அப்படியே அரை குறையாக விட்டுவிடக் கூடாது. பூரணையில் (பௌர்ணமியில்) பல் தேய்க்கக்கூடாது. அன்றியும் பௌர்ணமியில் மரங்களை வெட்டுதலும் கூடாது.

18. சாப்பிடும்போது உடம்பு குளித்துக் காலைக் கழுவி வாயைத் துடைத்துக்கொண்டு உண்ணுமிடம், உணவு, படைக்கும் கலம் இவைகளையெல்லாம் மந்திர விதிப்படி மண்டிலம் செய்து பிறகு உணவை உண்ணவேண்டும். அங்ஙனம் செய்யாதவர்களுடைய உணவை அரக்கர் எடுத்துக்கொள்வர்.

19. காலில் நீர் உலர்வதற்கு முன்னதாகவே உணவைச் சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்கவேண்டும், (மேலே உண்ணும்போது உடம்பு குளித்துக் காலையலம்பிக் கொண்டு சாப்பிடவேண்டும் என்று சொல்லப்பட்டது) காலைக் கழுவி நீர் உலர்வதற்கு முன் படுத்துக் கொள்ளக்கூடாது. அதாவது ஈரக்காலுடன் படுத்து நித்திரை செய்யக்கூடாது.

20. உணவு சாப்பிடும்போது கிழக்குத் திசையாக அமர்ந்து உண்ணவேண்டும். சாப்பிடும்போது தூங்கிக்கொண்டும், அசைந்துகொண்டும், வேறொன்றை நினைத்துக்கொண்டும், அங்கு மிங்கும் பார்த்துக்கொண்டும் உண்ணலாகாது. சிந்தாமல் உண்ணும் உணவைத் தொழுதுகொண்டே உண்ணுதல் வேண்டும்.

21. விருந்தாளிகளுக்கும், வயது சென்றவர்களுக்கும் பசுவுக்கும் பட்சிகளுக்கும் உணவு கொடுத்துப் புசிக்கச் செய்த பிறகு சாப்பிட வேண்டும்.



22. உண்ணும்போது கிழக்குப் பக்கமாக இருந்து உண்ண வேண்டுமென்று மேலே சொல்லப்பட்டது. கிழக்குப் பக்கமிருந்து உண்ண ஏதாகிலும் தடை ஏற்பட்டால் மற்ற திசையாக இருந்து உணவு அருந்தலாம். வாயிலுக்கு நேராக இருந்து உண்ணுவது மிகவும் தகுதியுடைத்தாம். கூரையின் முகட்டுக்கு நேராகக் கட்டிலை யிட்டுப் படுப்பது கூடாது.

23. படுத்துக்கொண்டும், நின்றுகொண்டும், வெளியான இடத்தில் இருந்துகொண்டும், ஆவலுடனும், அதிகமாகவும் உணவை உண்ணலாகாது. சாப்பிட வேண்டிய நெறி தப்பியும் சாப்பிடக் கூடாது.

24. தம்மினும் பெரியோர் தம்முடனிருந்து உண்ணப்புகின், அவர்களுக்கு வலது புறத்தில் உட்காராமல் இடது பக்கத்தில் உட்காரவேண்டும். அவர்கள் சாப்பிட ஆரம்பிக்கு முன் தாம் சாப்பிடலாகாது. சாப்பிட்டு முடிந்த பிறகு அவர்கள் எழுந்திருப்பதற்கு முன் தாம் எழுந்திருத்தலாகாது. அவர்கள் அருகில் அணுகி உட்காருதலும் கூடாது.

25. சாப்பிடும்போது இனிப்பான உணவுகளை முன்னதாகவும், கைப்பான (கசப்பான) உணவுகளைக் கடைசியாகவும், மற்ற கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பான உணவுகளை இடையிலும் உண்ணுதல் வேண்டும்.

26. தம்மிற் பெரியோர் உண்ணும்போது அவரைத் தன் பக்கத்தில் வைத்து உண்ணக்கூடாது. சாப்பாடு இடப்பட்ட உண்ணும் கலத்தில் (சிறிய கலத்தில்) உணவு உட்கொள்ள வேண்டும். உண்டபின் முறைப்படி எச்சில் முதலியவைகளை விரைந்து நீக்கிவிடவேண்டும்.

27. உணவை உண்டபிறகு வாயில் நீர் விட்டு நன்றாகக் கொப்பளித்து எச்சிலற உமிழ்ந்து நன்றாக வாயைத் துடைக்க வேண்டும். பிறகு தலையிலுள்ள அவயவங்களை (கண் காது மூக்கு இவைகளை) விரலால் துடைக்க வேண்டும்.

28. இரண்டு கையில் தண்ணீரை எடுத்துப் பருகக்கூடாது. யாதாயினு மொரு பொருளைப் பெரியார் நமக்குக் கொடுத்தால் அதை இரண்டு கையால் வாங்கவேண்டும். பெரியாருக்கு நாம் யாதேனு மொன்றைக் கொடுக்கும் போதும் இரண்டு கையால் கொடுக்க வேண்டும். பெரியோரிடத்தில் ஒரு கையால் ஏற்றலும் கொடுத்தலும் கூடாது.

29. மாலைக்காலத்தில் படுத்துக் கொள்வதும் வழிநடப்பதும் கூடாது. யார்மீதும் வெகுண்டு சீறிவிழுதல் கூடாது. மாலைக்காலத்தில் விளக்கேற்றி இரவில் உண்டு வெளியே போகாமல் ஓரிடத்தே உறங்க வேண்டும்.

30. படுத்துக் கொள்ளும் பொழுது கடவுளை வணங்கிப் பின் படுக்க வேண்டும். வடக்குப் பக்கமாகவும் கோண திசையாகவும் தலை வைத்துப் படுக்கக்கூடாது. வெற்றுடம்பா யிராமல் போர்வை போர்த்துக்கொள்ள வேண்டும்.

31. எங்கேனும் போகும்போது இரண்டு தேவர்களின் நடு விலும் பார்ப்பனர் நடுவிலும் போகக் கூடாது. தும்மின போதும் பெரியோர் வாழ்த்தும்போதும் தொழுதல் வேண்டும். வழி நண்பர்கள் எதிர்ப்படின் மனமுவந்து அவர்களுடன் செ வேண்டும்.

32. புல் முளைத்திருக்கிற இடங்களிலும், பயிர் விளை நிலங்களிலும், பசுச் சாணத்தின்மீதும், சுடுகாட்டிலும், பலர் நடக்கும் வழியிலும், நீருள்ள இடங்களிலும், கோவிலிலும், நிழலான இடங்களிலும், பசு மந்தைகள் கூடுகிற இடங்களிலும், சாம்பலின் மீதும் உமிழ் நீராகிய எச்சிலையும் மல மூத்திரங்களையும் கழித்தல் ஒருபோதும் கூடாது.

குறிப்பு :—இவ்வாசாரக்கோவை வடமொழி நூற்களிலிருந்தும், தென்மொழி நூற்களிலிருந்தும் வேண்டிய அளவு, தொடர்ந்து எழுதப்பட்டு வரும்.

# செங்குந்த மித்திரன்

செங்குந்த மித்திரன் எனப் பெயர் வாய்ந்த இப் பத்திரிகை கல்வி, தொழில், பழைய வழக்க ஒழுக்கங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நூலாராய்ச்சிகள், சரித்திர ஆராய்ச்சிகள், அரசியற் குறிப்புக்கள் முதலாக எல்லாருந் தெரியவேண்டும் அரும் பெரும் பொருள்களை விளக்கி மாதந் தோறும் வெளிவருகின்றது.

இது செங்குந்த மரபினர்க்கு மட்டுமன்றித் தமிழ் நாட்டில் உள்ள எல்லாரும் இன்றியமையாது அறியவேண்டும் பல அரும் பொருள்களையும் தெளிவாக விளக்கி வருகின்றதாதலால், இதனை எல்லாரும் வாங்கிக் கற்றுப் பல நலங்களைப் பெறுவார்களென்று நம்புகின்றோம்.

## வருடக் கையொப்ப விபரம்

| | |
|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | ரூ. 1—8 |
| சிங்கப்பூர், பினங்கு முதலிய இடங்கட்கு | ரூ. 2—0 |

---

## கடிதம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை

1. கடிதம் எழுதுபவர்கள் தாம் எழுத விரும்பிய விஷயங்களை நல்ல காகிதத்தில் ஒரு புறத்தில் மட்டும் கறுத்த மசியினால் வரிகள் நெருங்காமல் எழுத்துக்கள் தனித்தனி புலப்படும்படி எழுதல்வேண்டும்.

2. பொருள் இனிது விளங்கும்படி வாக்கியங்களை நீளவிடாமல் அணிமையில் வினைமுற்றுக் கொடுத்துச் சிறுச்சிறு வாக்கியங்களாக எழுதல் வேண்டும்.

3. வாசிப்பவர்களுக்கு அறிவையும், வியப்பையும், மகிழ்ச்சியையும் தரத் தக்க நற்பொருள்களையே அன்றி, பயனில்லாத சொற்றொடர்களையும் எவரையேனும், எச் சாதியையேனும், எச் சமயத்தினையேனும் பற்றி தூஷணங்கள் பொதிந்தவைகளையும் எழுதலாகாது.

4. கடிதம் முதலானவை எழுதுபவர்கள் தம் உண்மையான ...ரிக் முழுவிலாசம் முதலானவை நமக்குச் செவ்வையாய் விளங்கும்ப... தவர் கடிதத்தில் வரைந்து அனுப்புதல் வேண்டும். இவ்வாறு செ... களின் கடிதங்கள் பிரசுரஞ் செய்யப்படமாட்டா. தள்ளப்படுங்

5. நம் பத்திரிகையில் பிரசுரிக்கத் தகாதெனவென்று ...டா. கடிதம் கடிதங்கள் முதலானவை உரியவர்களுக்குத் திருப்ப...களும் பரிகரிக் முதலானவைகளிலுள்ள கடுஞ் சொற்களும் தீய பொரு...ய கூற்றுக்களும் கப்படும். கடிதம் முதலானவைகளின் கர்த்தர்களுடை...வளவிற்கு உண்மை கருத்துக்களும் நம்மைச் சாரமாட்டா. அவைகள் ... இருத்தல் வேண்டும். என்பதில் அவர்களே பொறுப்புடையவர்களாக...டாம்.
ஆகவே அவைகளுக்கு நாம் உத்திரவாதியாகமாட்...ததும் நான்கு அல்லது ஐந்து

6. அனுப்பும் கடிதங்களை, ஒவ்வொரு ம...ண்டும்.
தேதிக்குள் நமக்குச் சேரும்படி செய்தல் வே...

மானேஜர்:—"செங்கு...த மித்திரன்" ஆபீஸ்,
31, ...பிராண்மணக்காரன் தெரு, சென்னை.

# செங்குந்தர் பிரபந்தத் திரட்டு



என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இதனுள் கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய ஈட்டி எழுபது எழுப்பெழுபது இவ்விரண்டும், புகழேந்திப் புலவர் செய்தருளிய திருக்கை வழக்கமும் மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங்களும் அடங்கும்.

ஈட்டி யெழுபது கச்சிப்பிரதாபனார் செய்தருளிய பேருரையுடன் கூடியது, இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலியவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இந்நூற்றொகுதி தமிழாசிரியர் திருவாளர் கா. நமச்சிவாயமுதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகனார் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு எழுதிய பெருமதிப்புரையும் கொண்டது.

இது செங்குந்த மரபினர்க்கே யன்றித் தமிழ் மக்கள் எல்லோர்க்கும் வேண்டற்பாலதென்பது ஆராய்ச்சி யாளர் கருத்தாம்.

முழிய பதிப்பு கிளிட்டுப் பைண்டு — விலை ரூ 3.
தபாற் கூலி — அணு 8.

இப் பிரபந்தத் திரட்டு 'செங்குந்த மித்திரன்' சந்தாதாரர்கட்கு மட்டும் விலை ரூ. 2-8 ஆக கொடுக்கப்படும். தொகுப்பாக ஒரே முறையில் ஐந்து புஸ்தகம் வாங்குபவர்கட்கு ஒரு புஸ்தகம் விலையின்றிக் கொடுக்கப்படும்.

புஸ்தகம் கிடைக்குமிடம்

மானேஜர்:— "செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

தி. க. ச. சபாபதி முதலியார்,
கவுன்சிலர் திருவாரூர் S. I. R.

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE.